இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 215 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 03 – சனிக்கிழமை 16 மார்ச் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 215 : Thiruvalluvar Year - 2055 - Panguni 03 - Saturday 16 March 2024 - Chennai 16 Pages ₹ 5.00



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 16-03-2024

# தேர்தல் ஆணையமே சர்ச்சைக்குரியது

தேர்தல்தான் சர்ச்சைக்குரியதாக இருக்கும் என்றால் பா.ஜ.க.வின் காலத்தில் தேர்தல் 'ஆணையமே' சர்ச்சைக்குரியதாக ஆகிவிட்டது!

இந்திய நாடாளுமன்றத்துக்கு தேர்தல் தேதியை எப்போது அறிவிப்பார்கள், தேர்தல் எப்போது நடக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பு கோடிக்கணக்கான மக்களிடம் எழுந்து நின்ற நிலையில் – இந்தத் தேர்தல்களை எல்லாம் நடத்த வேண்டிய தேர்தல் ஆணையர் அருண் கோயல் திடீரென்று பதவி விலகினார். 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தேர்தல் ஆணையராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அருண் கோயலுக்கு, 2027ஆம் ஆண்டு டிசம்பர் வரைக்கும் பதவிக்காலம் இருக்கிறது. இன்னும் மூன்றரை ஆண்டு காலம் அவருக்கு பதவிக் காலம் இருக்கும் நிலையில் அவர் தனது பதவியை விட்டு விலகி இருக்கிறார். ஒன்றிய அரசாங்கத்தில் குழப்பம் இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டுதான் அருண்கோயலின் பதவி விலகல்.

தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார், தேர்தல் ஆணையர்கள் அனுப் பாண்டே, அருண்கோயல் ஆகிய மூவரைக் கொண்டதுதான் இந்திய நாட்டின் தேர்தல் ஆணையம் ஆகும். ஏப்ரல் – மே மாதங்களில் நடக்க இருக்கும் இந்திய நாட்டின் மிகப் பெரிய தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கடந்த ஓராண்டு காலமாகச் செய்து வந்தவர்கள் இவர்கள் மூவரும்தான். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 324 ஆவது பிரிவு இந்த நாட்டின் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரத்தை தேர்தல் ஆணையத்துக்கு வழங்குகிறது.

இத்தகைய அதிகாரம் பொருந்திய அமைப்பில் இடம்பெற்றிருந்த தேர்தல் ஆணையர் அனுப் பாண்டே, கடந்த மாதம் பணி ஓய்வு பெற்றுவிட்டு போய் விட்டார்.

இத்தகைய அதிகாரம் பொருந்திய அமைப்பில் இடம்பெற்றிருந்த தேர்தல் ஆணையர் அருண் கோயல், கடந்த 9 ஆம் தேதி பதவியை விட்டு விலகி விட்டார்.

**நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் இத்தகைய ஒரு செயல் நடக்காது. அப்படி நடந்தால் அந்த நாட்டில் ஜனநாயக நெறிமுறைகள் சிக்கலுக்கு உள்ளாகி இருக்கிறது என்று பொருள்.**

**சுதந்திரமாக – தனித்துச் செயல்பட வேண்டிய தேர்தல் ஆணையத்தை தன் வசப்படுத்தும் செயலை ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்தது. இதைப் போன்ற ஜனநாயக அறமற்ற செயல் இருக்க முடியாது.**

தன்னிச்சையாக இயங்க வேண்டிய அனைத்து அமைப்புகளையும் தன்வசப்படுத்தும் வகையில் சட்டம் கொண்டு வருவதுதான் பா.ஜ.க.வின் பாணியாகும். அதுதான் தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டத்திலும் நடந்திருக்கிறது.

சுதந்திரமாகச் செயல்படவேண்டிய தேர்தல் ஆணையம்பற்றி – உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி, தன் வசதிக்கேற்ப சட்ட திருத்தம் கொண்டு வந்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தேர்தல் ஆணையம் என்பது ஜனநாயகத்தின் முகமாக இருக்க வேண்டியது ஆகும். அந்த தேர்தல் ஆணையத்தை தனது வசதிக்கு ஏற்ப வளைத்து விட்டது பா.ஜ.க. அரசு.

இந்த அருண் கோயல் நியமனமே சர்ச்சைக்குரியதாகத்தான் தொடக்கத்தில் அமைந்திருந்தது. பஞ்சாப் மாநில அதிகாரியான அருண் கோயல், 2022 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் நாள் திடீரென பதவி விலகினார். மறுநாளே இவர் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார். அதாவது தேர்தல் ஆணையராக இவரை நியமிப்பதற்காகவே பதவி விலக வைத்துள்ளார்கள். அருண் கோயல் நியமனத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினரும் வழக்கு தாக்கல் செய்தார்கள். இது போன்ற முக்கியமான பணியிடத்துக்கான தேர்வை 'கொலிஜியம்' போன்ற அமைப்புதான் நடத்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். இந்த வழக்கில் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரசியல் சாசன அமர்வு தனது வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியது. நீதியரசர் கே.எம். ஜோசப் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு இத்தீர்ப்பை அளித்தது.

★ பிரதமர்

★ மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்

★ உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகிய மூவர் அடங்கிய குழுதான் தலைமை தேர்தல் ஆணையரையும், தேர்தல் ஆணையர்களையும் தேர்வு செய்ய வேண்டும் என்று தீர்ப்பு அளித்தது.

உச்சநீதிமன்றத்தின் மீது மரியாதை இல்லாத பா.ஜ.க. அரசு 2023 டிசம்பர் 21ஆம் தேதி அன்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அதன்படி உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி என்பதற்குப் பதிலாக ஒன்றிய அமைச்சர் ஒருவர் என்று மாற்றி விட்டார்கள். இதன்படி பார்த்தால் தேர்தல் ஆணையரைத் தேர்வு செய்யும் மூவர் குழுவில் இருவர், ஆளும் கட்சியைச் சேர்ந்தவராக இருக்குமாறு பார்த்துக் கொண்டார்கள். அதாவது தங்கள் வசதிக்கு ஏற்ப சட்டத்தை வளைத்துக் கொண்டார்கள். இப்படி உருவாக்கப்பட்ட எதேச்சாதிகார சட்டப்படி புதிய தேர்தல் ஆணையர்கள் இருவரை தேர்ந்தெடுத்து அறிவித்துவிட்டார்கள்.

முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான சுக்பீர் சிங் சாந்து, ஞானேஷ் குமார் ஆகிய இருவரும் புதிய தேர்தல் ஆணையர்களாக நேற்றைய தினம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள். பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் அதீர் ரஞ்சன் சௌத்ரி ஆகிய மூவர் கொண்ட கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

**புதிய தேர்தல் ஆணையராகப் பொறுப்பேற்றுள்ள ஞானேஸ்குமார், அமித் ஷாவின் உள்துறையில் அவருக்குக் கீழ் பணியாற்றிய தகுதிக்குரியவர்!**

**இந்த நாடகத்தை அதீர் ரஞ்சன் வெளிப்படுத்திவிட்டார். 212 பேர் விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் யார் யார் என்ற பட்டியலை அதீர் ரஞ்சனுக்குத் தரவில்லை. 212 பேரில் 6 பேர் பெயரை தனியாகப் பிரித்து – இவர்களில் 2 பேரை தேர்வு செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்த 6 பேரின் தகுதியை அவர் கேட்டுள்ளார். அதையும் தரவில்லை. சும்மா பெயரை மட்டும் கொடுத்துள்ளார்கள். 6 பேரில் இருந்து தேர்வு செய்யப்படும் 2 பேர் பெயரை 10 நிமிடத்துக்கு முன்புதான் அவரிடம் கொடுத்துள்ளார்கள்.**

**உலகத்தில் இந்த மாதிரி செலக்ஷன் எந்த நாட்டிலும் நடந்திருக்காது! பா.ஜ.க. பாணி செலக்ஷன் என்று இதற்குப் பெயர் சூட்டலாம்.**

●●

---

தலைமைக் கழகத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி மறைவெய்திய

# என்.ஜெயக்குமார் குடும்ப நிதியாக - தி.மு.க. சார்பில் ரூ.25 இலட்சம்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!



**சென்னை, மார்ச் 16- தலைமைக் கழகத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி மறைவெய்திய என்.ஜெயக்குமார் அவர்களின் குடும்ப நிதியாக தி.மு.க. சார்பில் 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை ஜெயக்குமாரின் துணைவியாரிடம் தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

அதன் விபரம் வருமாறு:-

தி.மு.க. தலைமைக் கழகத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வந்த என்.ஜெயக்குமார் அவர்கள், திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டு, சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி கடந்த பிப்ரவரி 13ஆம் தேதி மரணமடைந்தார்.

அதனையொட்டி அவரது குடும்பத்திற்கு நிதி உதவியாக, தி.மு.க. தலைமைக் கழகத்திலிருந்து ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கான காசோலையினை, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், என். ஜெயக்குமார் அவர்களின் துணைவியார் திருமதி ஜெ. ரமணி அவர்களிடம் நேற்று (15.3.2024) வழங்கினார்.

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, வேளாண்மைத் துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம், கழக செய்தித் தொடர்புக்குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமைக் கழக மேலாளர் ஆர்.பத்மநாபன் ஆகியோர் அப்போது உடனிருந்தனர்.

---

புதுக்கோட்டை - நாமக்கல் - திருவண்ணாமலை - காரைக்குடி!

# 4 புதிய மாநகராட்சிகள் உருவாக்கம்!

## முதல்வர் முக.ஸ்டாலின் ஆணை!

**சென்னை, மார்ச். 16- புதுக்கோட்டை, நாமக்கல், திருவண்ணாமலை மற்றும் காரைக்குடி ஆகிய நகராட்சிகள் மற்றும் அவற்றிற்கு அருகாமையில் அமைந்துள்ள வேகமாக நகரமயமாகி வரும் பேரூராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றை ஒன்றிணைத்து நான்கு புதிய மாநகராட்சிகளை அமைத்துருவாக்கவும் மற்றும் தொடர்பான நடைமுறைகளை தொடங்கவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**இது தொடர்பான அரசின் செய்திக்குறிப்பு:**

*தமிழ்நாடு நாட்டிலேயே அதிக நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, மாநிலத்தில் நகர்ப்புர மக்கள்தொகையின் சதவீதம் 48.45 ஆகும். தற்போது, மொத்த மக்கள்தொகையில் நகர்ப்புரங்களில் வசிக்கும் மக்கள்தொகை சதவீதம் 53 சதவீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.*

*விரைவான நகரமயமாக்கல், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் உருவாக்கப்பட வேண்டிய அடிப்படை உட்கட்டமைப்புகளையும், குடிமைச் சேவைகளையும் மேலும் சிறப்பாக வழங்குவதற்கான எண்ணற்ற சவால்களை உருவாக்கியுள்ளது. மாநிலத்தின் நகர்ப்புர பகுதிகளில் வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்க, இந்த சவால்களை திறம்பட எதிர்கொள்ள வேண்டும் என அரசு கருதுகிறது.*

*இதனடிப்படையில், அரசு, பெருநகரங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள நகர்ப்புரத் தன்மை கொண்ட, விரைந்து நகரமயமாகி வரும் பகுதிகளிலும் நகரங்களுக்கு இணையான தரமான சாலைகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், ஆற்றல்மிகு மின்விளக்குகள், பாதாள சாக்கடை போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திதரும் நோக்கோடு, விரைவாக நகரமயமாகி வரும் பகுதிகளை அவற்றின் அருகாமையில் அமைந்துள்ள நகரங்களோடு இணைத்து விரிவாக்கம் செய்யப்பட்ட நகராட்சி அல்லது மாநகராட்சிகளாக அமைத்துருவாக்கி வருகிறது. இதன்படி, இவ்வரசு, கடந்த 3 ஆண்டுகளில், 28 புதிய நகராட்சிகள் மற்றும் தாம்பரம், காஞ்சிபுரம், கடலூர், கும்பகோணம், கரூர், சிவகாசி ஆகிய 6 மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தரம் உயர்த்தப்பட்ட இந்நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்து, மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்துவதற்கான பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.*

*இந்நிலையில், வரலாற்றுத் தலைநகரமாக விளங்கிய புதுக்கோட்டை, கோயில் நகரமான திருவண்ணாமலை, தொழில் நகரமான நாமக்கல், கல்வி நகரமான காரைக்குடி போன்ற நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்த வேண்டுமென பெறப்பட்ட கோரிக்கைகளை ஏற்று அந்நகரங்களையும், அவற்றின் அருகாமையில் அமைந்துள்ள விரைந்து நகரமயமாகி வரும் பேரூராட்சிகள், ஊராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளையும் ஒன்றிணைத்து புதிய மாநகராட்சிகள் உருவாக்கப்படும் என நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் 30.03.2023 அன்று அறிவித்தார்.*

*இந்த அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பான உரிய பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், 4 புதிய மாநகராட்சிகளை அமைத்துருவாக்குதற்கான நடைமுறைகளை தொடங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்போது ஆணையிட்டுள்ளார்கள்.*

*இதன்படி, புதுக்கோட்டை நகராட்சி மற்றும் 11 ஊராட்சிகளை ஒன்றிணைத்து புதுக்கோட்டை மாநகராட்சி; திருவண்ணாமலை நகராட்சி மற்றும் 18 ஊராட்சிகள், அடி அண்ணாமலையிலுள்ள பகுதிகள் ஆகிவற்றை ஒன்றிணைத்து திருவண்ணாமலை மாநகராட்சி; நாமக்கல் நகராட்சி மற்றும் 12 ஊராட்சிகளை ஒன்றிணைத்து நாமக்கல் மாநகராட்சி; காரைக்குடி நகராட்சி மற்றும் இரண்டு பேரூராட்சிகள், ஐந்து ஊராட்சிகளை ஒன்றிணைத்து காரைக்குடி மாநகராட்சி, என மொத்தம் 4 புதிய மாநகராட்சிகளை உருவாக்குவது தொடர்பான அரசின் உத்தேச முடிவினை அறிவித்து நேற்று (15.3.2024) ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 1998 ஆம் ஆண்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்படியான உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு புதிய மாநகராட்சிகள் அமைத்துருவாக்கப் படும்.*

*இதன்மூலம், புதுக்கோட்டை, நாமக்கல், திருவண்ணாமலை, காரைக்குடி ஆகிய நகராட்சிகள் மற்றும் அதன் அருகாமையில் அமைந்துள்ள உள்ளாட்சி பகுதிகளில் சாலைகள், பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேலும் சிறப்பாக ஏற்படுத்தவும் மற்றும் இப்பகுதியில் வசிக்கும் மக்கள், பல்வேறு தேவைகளுக்காக இப்பகுதிகளுக்கு வந்து செல்வோர், சுற்றுலாப் பயணிகள், வணிக நிறுவனங்கள், தொழில் துறையினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்படவும் வாய்ப்பாகவும் அமையும்.*

*இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (15.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பு.த.இளங்கோவன் மற்றும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வி.டி. கலைச்செல்வன் ஆகியோர் தலைமையில் 500 பேர் அ.தி.மு.க.விலிருந்து விலகி தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியில், கழக பொதுச்செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டிஆர். பாலு, முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, அமைச்சர்கள், கடலூர் மாவட்டச் செயலாளர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சி.வி. கணேசன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# மீனவர்களையும் - மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக மீட்க நடவடிக்கை எடுத்திடுவீர்!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, மார்ச் 16-

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும், இந்தியாஇலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவை விரைவில் கூட்டிடவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கடிதம் வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 மீனவர்கள் உட்பட 15 மீனவர்கள், இந்திய எல்லையைத் தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (15.3.2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இந்திய மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் அடிக்கடி கைது செய்யப்படுவது குறித்து தான் ஏற்கெனவே பலமுறை கடிதம் எழுதியுள்ளதாகவும், கடந்த வாரம் எழுதியிருந்த கடிதத்தில் இலங்கையில் சிறைபிடிக்கப் பட்டிருந்த 22 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க தான் கோரியிருந்ததையும் சுட்டிக்காட்டி யுள்ள முதலமைச்சர் அவர்கள், நேற்று (15.03.2024) தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் உட்பட 15 மீனவர்களும், அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப் பட்டுள்ளதாக கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்று மீனவர்களை கைது செய்யும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதால் மீனவர்களின் வாழ்வாதாரம் சீர்குலைவதுடன், மாநிலத்தில் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவ சமூகத்தினரிடையே பெருத்த கொந்தளிப்பும், விரக்தியும் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இப்பிரச்சினைக்குத் தூதரக நடவடிக்கையின் மூலம் தீர்வு காண வேண்டியது மிக அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.

எனவே. இந்தியா - இலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி, அதன் மூலம் இலங்கையில் சிறை பிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க இலங்கை அதிகாரிகளை வலியுறுத்த வேண்டுமென்றும், இலங்கைக் கடற்படை யினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கலைஞர் நூற்றாண்டு நூலகம் -

# தென் மாவட்ட மக்களுக்கான அறிவு ஆலயமாகத் திகழ்கிறது!

## 5 லட்சம் பார்வையாளர்கள் கடந்ததை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, மார்ச் 16-

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் 5 இலட்சம் பார்வையாளர்கள் கடந்ததை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவுகளில் தென் மாவட்ட மக்களுக்கான அறிவு ஆலயமாகத் திகழ்கிறது கலைஞர் நூற்றாண்டு நூலகம் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

**கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் 5 லட்சம் பார்வையாளர்கள் கடந்துவிட்டதாக, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் அழைத்துச் சொன்னார்.**



**மகிழ்ச்சி!**

**தென் மாவட்ட மக்களுக்கான அறிவு ஆலயமாகத் திகழ்கிறது கலைஞர் நூற்றாண்டு நூலகம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### விருத்தாசலம் நகர முன்னாள் செயலாளர் - முன்னாள் எம்.எல்.ஏ.

# வி.டி.கலைச்செல்வன் - முன்னாள் எம்.பி. பு.தா.இளங்கோவன் தலைமையில்! அ.தி.மு.க.- அ.ம.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!

*சென்னை, மார்ச் 16-*

*முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் முன்னிலையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (15.3.2024) காலை, அ.தி.மு.க.வைச் சேர்ந்த கடலூர் மேற்கு மாவட்டம், விருத்தாசலம் நகர முன்னாள் செயலாளர் விடி.கலைச்செல்வன் மற்றும் முன்னாள் எம்.பி. பு.தா.இளங்கோவன் ஆகியோர் தலைமையில் அ.தி.மு.க., அ.ம.மு.க. நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பிரதிநிதி, கிளைச் செயலாளர்கள், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.*

*அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் - மாண்புமிகு அமைச்சருமான சி.வெ.கணேசன், செய்தித் தொடர்புக்குழு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.*

*தி.மு.கழகத்தில் இணைந்தவர்கள் விவரம்*

*அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த விருத்தாசலம் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப செயலாளர் எஸ்.சுதாகர், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் சின் கண்டியாங்குப்பம், ஜீ. வீர பாண்டியன், சித்தூர் எஸ். துரைசாமி, காட்டுபரூர் பி.அர்ச்சுனன், ஒன்றிய முன்னாள் கவுன்சிலர் சாத்தியம் எஸ்.சின்னசாமி, கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் வி.பஞ்சாட்சரம், நல்லூர் ஒன்றிய மாவட்ட பிரதிநிதி எம்.தண்டபாணி, சாத்துக்குடல் கீழ்பாதி கிளைச் செயலாளர் ஆர்.கோவிந்தசாமி, பூவனூர் கிளைச் செயலாளர் கே.அருண்குமார், வரம்பனூர் கிளைச் செயலாளர் டி. செந்தில், சின்னகண்டியன் குப்பம் கிளைச் செயலாளர் சி.முருகானந்தம், கர்நத்தம் கிளைச் செயலாளர் ரமேஷ், மங்கலம் பேட்டை பேரூர் சிறுபான்மை பிரிவு எம்.சையதுரசூல், மங்கலம் பேட்டை பேரூர் முன்னாள் சிறுபான்மை செயலாளர் ஆர்.மன்சூர்அலி, விருததாசலம் நகரச் செயலாளர் மார்க்கட் டி.நடராஜன், எஸ்.பிரகாஷ்*

*அ.ம.மு.க. கட்சியைச் சேர்ந்த மாநில எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர் சோழன் எம்.எஸ்.சம்சுதீன், மாவட்ட வர்த்தக அணிச் செயலாளர் டி.பாபு, நல்லூர் ஒன்றியச் செயலாளர் ஏ.ரமேஷ், மங்கலம பேட்டை நகர முன்னாள் நகரச் செயலாளர் கே.செல்வராஜ், முன்னாள் அவைத்தலைவர் மங்கலமபேட்டை பேரூர் பி.கார்த்தி, நல்லூர் கிளைச் செயலாளர் சி.மணிகண்டன், குப்பநத்தம் ஊராட்சி செயலாளர் ஜி. அன்பழகன், விருத்தாசலம் ஒன்றிய அம்மா பேரவைச் செயலாளர் ரவி, மங்கலம் பேட்டை பேரூராட்சி 8வது வார்டு செயலாளர் சையது நிசார் மற்றும் ஓபிஎஸ் அணி விருத்தாசலம் நகர துணைச் செயலாளர் கே.சதிஷ்குமார் மற்றும் ஜி.ரமேஷ் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.*



தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்தில், நேற்று (15.03.2024) நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு குடிநீர், பாதாள சாக்கடை திட்டங்கள், வாரியத்தின் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சியினை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், வ.தட்சிணாமூர்த்தி, இணை மேலாண்மை இயக்குநர், ஆனந்த் மோகன், மற்றும் வாரிய அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

### தடய அறிவியல் துறையில் இளநிலை

# அறிவியல் அலுவலர் பணியிடங்கள் - 29 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 16

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.3.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தடய அறிவியல் துறையில் இளநிலை அறிவியல் அலுவலர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 29 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கினார்.

குற்ற நிகழ்வுகளில் குற்றவாளிகளை கண்டறிய சேகரிக்கப்படும் சான்றுப்பொருட்களை அறிவியல் ஆய்வு மேற்கொண்டு, நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க உதவுவதே தடய அறிவியல் துறையின் முக்கியப் பணியாகும். இவர்கள் தடய அறிவியல் துறையின் தலைமை ஆய்வகம் மற்றும் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் பணியமர்த்தப்படுவார்கள். முன்னதாக 26.7.2021 அன்று மேற்கண்ட பதவியில் 62 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்களால் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டு தடய அறிவியல் துறையில் பணிகள் எவ்வித தொய்வுமின்றி நடைபெற வழிவகை செய்யப்பட்டது.

மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் தடய அறிவியல் துறையின் செயல்திறனை உயர்த்தும் வகையில், 24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிதாக மேம்படுத்தப்பட்ட டிஎன்ஏ (DNA Unit) பிரிவுகள், கணினி தடய அறிவியல் (Computer Forensic Unit) பிரிவுகள், நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் (Mobile Forensic Lab) அமைக்கப்பட்டதுடன், தமிழ்நாடு தடய அறிவியல் துறையின் அலகுகள் ISO/ IEC 17025, 2017 தரச் சான்றினை பெற்றுள்ளது.

மேலும், சிறார்களிடம் பாலியல் குற்றங்கள் புரியும் குற்றவாளிகளின் மீதான வழக்குகளை விரைந்து முடிக்க ஏதுவாக போக்சோ சட்டத்தின் கீழான குற்ற நிகழ்வுகளில் தடய அறிவியல் துறை அறிக்கைகளை விரைந்து வழங்கிட, போக்சோ கணினி தடய அறிவியல் பிரிவு சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், 2023-24 ஆம் ஆண்டு நடைபெற்ற காவல் துறை மானியக் கோரிக்கையின் போது முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி, திருநெல்வேலியில் டிஎன்ஏ (DNA) பிரிவும், போதை மற்றும் மனமயக்க (Narcotic Drug Testing Unit) பொருட்கள் தொடர்பான குற்றங்களை கண்டறிய தனியே போதை மற்றும் மனமயக்க பொருட்கள் பரிசோதனை அலகு கோயம்புத்தூரிலும், இராமநாதபுரம், சேலம், திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களை தரம் உயர்த்தவும், தடய அறிவியல் துறையின் அறிக்கைகளை இணைய வழியில் நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிக்க தேவையான கட்டமைப்பு வசதிகள் மற்றும் வழக்குகளை விரைந்து முடித்திடவும், இணைய வழியே வீடியோ கான்பரன்ஸ் முறையில் நீதிமன்றங்களின் முன் தடய அறிவியல் அலுவலர்கள் சாட்சியம் அளிக்கத் தேவையான கட்டமைப்புகளை ஏற்படுத்திடவும், 25.09 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், தடய அறிவியல் துறையில் பணியாற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில். ஆண்டுதோறும் இரண்டு பணியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதக்கம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.


இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில், தடய அறிவியல் துறையை நவீனப்படுத்த தேவையான உபகரணங்கள் வாங்க 26.72 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தடய அறிவியல் துறையை உலகத் தரத்திற்கு உயர்த்துவதற்கான அனைத்து முன்னெடுப்புகளும் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியின்போது தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா மற்றும் தடய அறிவியல் துறை இயக்குநர் திருமதி இல.விஜயலதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் தி.மு.க. தலைமையிலான

# இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள் - தலைவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலை சிறப்பான முறையில் எதிர்கொள்வதற்காக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள் -தலைவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று 16-3-2024 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் குரோம்பேட்டை, ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஆனந்தா திருமண மண்டபத்தில் எனது (தா.மோ.அன்பரசன்) தலைமையிலும், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, தமிழ்நாடு காங்கிரஸ் மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள தி.மு.க - காங்கிரஸ் - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் - இந்திய கம்யூனிஸ்ட் - ம.தி.மு.க. - விடுதலை சிறுத்தைகள் - இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - மனிதநேய மக்கள் கட்சி - திராவிடர் கழகம் - தமிழக வாழ்வுரிமை கட்சி - மக்கள் நீதி மய்யம் - தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி - சமத்துவ மக்கள் கழகம் - திராவிட இயக்க தமிழர் பேரவை உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் மாவட்ட தலைவர்கள் - செயலாளர்கள் இக்கலந்தாலோசனைக் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**

செயலாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.3.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தமிழ்நாடு தடய அறிவியல் துறையில் இளநிலை அறிவியல் அலுவலர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 29 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, தடய அறிவியல் துறை இயக்குநர் திருமதி எல். விஜயலதா ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நேற்று (15.03.2024) சென்னையில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பஹ்ரைன் வாழ் தமிழ் மாணவர்கள் நலன் கருதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கான 138 தமிழ் பாடப்புத்தகங்களை மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லாவிடம் வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.கஜலட்சுமி, மற்றும் இணை இயக்குநர் சங்கர சரவணன் ஆகியோர் உடனிருந்தனர்.

### கழகத் தலைவர் – முதலமைச்சர் பிறந்த நாள் விழா! ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# 2000 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, மார்ச் 16-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கழக அமைப்பு துணைச் செயலாளர் திரு .வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப. தாயகம்கவி ஏற்பாட்டில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 73 ல் உள்ள பென்சனர்ஸ் லேன் 3 வது தெரு, 4 வது தெரு, 5 வது தெரு மற்றும் கெனால் ஓரம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அரிசி உள்ளிட்ட மளிகை பொருட்களை கடந்த 10/03/2024 காலை 7 மணியளவில் ஸ்டிராஹன்ஸ் ரோடு சாய் பாபா கோவில் அருகில் உள்ள மாநகராட்சி பள்ளியிலும்,

மேலும் 76 வது வட்டத்தில் உள்ள பெரம்பூர் பேரக்ஸ் ரோடு மற்றும் சென்னை குடிசை மாற்று வாரிய குடியிருப்பு மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் வசிக்கும் மக்களுக்கு 10/03/2024 அன்று காலை 8 மணியளவில் ஸ்டிராஹன்ஸ் ரோடு பள்ளியிலும், அதைப்போலவே 72 வது வட்டம் சாஸ்திரி நகர் ஒன்றாவது தெரு முதல் 22 ஆவது தெரு வரையிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கு 13 ம் தேதி டான் பாஸ்கோ பள்ளியில் நடைபெற்ற புகழரங்கம் நிகழ்ச்சியிலும்

கழக அமைப்பு துணைச் செயலாளர் திரு .வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப. தாயகம்கவி ஏற்பாட்டில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், கழக அயலக அணி தலைவர் நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதிவீராசாமி, 6வது மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ்குமார் எம்.சி, திரு.வி.க.நகர் பகுதி கழக செயலாளர்கள் செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக் கண்ணு, மாவட்ட பொருளாளர் இசட்.ஆசாத் எம்.சி., மாவட்ட இளைஞர்அணிஅமைப்பாளர் டி. லோகேஷ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ந.துலுக்காணம், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் லயன் பி.உதயசங்கர், பி.ஜெ.துளசிங்கம். மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் எம். பெரோஸ்கான், மாவட்ட அயலகஅணி அமைப்பாளர் பெரம்பூர் ஆர்.மகேஷ், மாவட்ட நெசவாளர் ஆணி அமைப்பாளர் கா.ராஜ்முகமது. இரா.வீரமணி,

மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் மு.சரவணன் எம்.சி., புனிதவதிஎத்திராசன் எம்.சி.,ரமணிலோகேஷ் எம்.சி., தமிழ்செல்விசசிகுமார் எம்.சி., வட்ட கழக செயலாளர்கள் பரிமளாசுரேஷ், மா.ருத்ரமூர்த்தி. எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், எம்.தமீம்பாய், பொல்லு டி.சுரேஷ்குமார், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், வி.கே.வெங்கடேசன். எஸ்.சசிகுமார், எஸ். வெங்கடேசன், தெற்கு பகுதி மற்றும் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள், கோவிந்தன்,அ.கருணாநிதி,வனஜா சண்முகம், பி.சுகுமார், இரா.கருணாநிதி, தில்லை கதிரவன், பெரம்பூர்ஆர். ராஜன், புல்லட்கி.ரமேஷ், அ.புவனவதி, கிணார் ஆறுமுகம், க.எழிலன், எஸ்.கே. சிவகுமார், உதயசீலன், மணிமாறன்,பா.பி.தாஸ், சக்திவேல், ஈஸ்வரிகண்ணன், சாந்திமாசிலாமணி, எம்.எஸ்.நிறைமொழி, பி. ஜெகதீஷ், கே.பிரேமா, எம். கிரிஜா, எஸ்.தியாகராஜன், வி.சங்கர், எஸ்.விஜய மகேந்திரன், சிவகௌதம் மற்றும் மாவட்ட கழக, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவ,பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் பங்கேற்றனர்.

### தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் படகு குழாம்களில் கடந்த 11 மாதங்களில்

# 42,94,477 சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்துள்ளனர்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்!

சென்னை, மார்ச் 16-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் படகு குழாம்களில் 2023 ஏப்ரல் முதல் 2024 பிப்ரவரி மாதம் வரை 11 மாதங்களில் மொத்தம் 42,94,477 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டு நெஞ்சம் நிறைந்த, நீங்காத அனுபவங்களை பெற்றனர் என சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாகத்தில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நேற்று (15.3.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது :

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், சுற்றுலா பயணத் திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களை பொதுமக்கள் எளிதில் அடையாளம் கண்டறியும் வகையில் அமுதகம் என்று பெயர் சூட்டியுள்ளார். சுற்றுலா கொள்கை 2023 ஐ வெளியிட்டு, சுற்றுலாத்துறையில் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 590 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி புதிய படகு குழாம்கள் சுற்றுலா பயணிகளுக்காக பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 42,22,945 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2023 2024 ஆம் நிதியாண்டில் 2023 ஏப்ரல் முதல் 2024 பிப்ரவரி மாதம் வரை 11 மாதங்களில் மட்டும் மொத்தம் 42,94,477 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அலுவலர்களும், பணியாளர்களும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்களுக்கு வருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கி அவர்களுடைய முதலாவது விருப்பமான தேர்வாக ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் அமுதகம் உணவகங்களை உருவாக்கும் வகையில் பணியாற்றிட வேண்டும்.

வருகின்ற கோடை விடுமுறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சுற்றுலா பயணத்திட்டங்களில் முன்பதிவு செய்து மலைவாழிடங்களுக்கும், பிற பகுதிகளுக்கும் பொதுமக்கள் சுற்றுலா மேற்கொண்டு பயன்பெற வேண்டும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் நகரின் மையப்பகுதிகளில் குறிப்பாக பேருந்து நிலையத்தில் இருந்து மிக அருகில் உள்ளன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து வெவ்வேறு ஊர்களில் 3 நாட்கள் தங்குபவர்கள், ஒரே விடுதியில் 3 நாட்களுக்கு தங்குபவர்கள், மொத்தமாக 5 அறைகள், 10 அறைகள், 20 அறைகள் என முன்பதிவு செய்பவர்கள் ஆகிய நபர்களுக்கு தள்ளுபடி சலுகைகள் வெவ்வேறு சதவீதத்தில் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயண திட்டங்கள் மற்றும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி அறைகளை முன்பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com என்ற இணைதள பக்கத்தில் தங்களது செல்போன் அல்லது கணினி மூலமாக முன்பதிவு செய்தோ, அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகமான சுற்றுலா வளாகத்திற்கு நேரில் வருகை தந்தோ முன்பதிவு செய்யலாம்.

மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கட்டணமில்லா தொலைபேசி எண் 180042531111 மற்றும் 044 25333333, 04425333444 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டும், வலைதள முகவரி www.ttdconline.com மூலமாகவும் விவரங்களை பெறலாம்/

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### 50க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன்பெறும் வகையில்

# ஆவடியில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அதிநவீன மருத்துவமனை!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. திறந்து வைத்து பார்வையிட்டார்!

திருவள்ளூர், மார்ச் 16

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி மெய்ய பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அதிநவீன அரசு மருத்துவமனையை திறந்து வைக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு அடுத்து உதயமானது ஆவடியில் அதிநவீன மருத்துவமனை, 45 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட ஆவடி அரசு பொது மருத்துவமனையை மருத்துவ மக்கள் நலத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்த தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ. கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

கடந்த 2020ஆம் ஆண்டு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் ஆவடியில் புதிய பொது மருத்துவமனை கட்ட அரசாணை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் 2021ஆம் ஆண்டு மே மாதம் 26.90 கோடி மதிப்பிட்டில் ஆவடியில் புதிய அரசு பொது மருத்துவமனை கட்ட அடிக்கல் நாட்டப்பட்டு முதற்கட்ட பணிகள் நடந்து வந்தது. இந்நிலையில் தனியார் மருத்துவமனைக்கு நிகராக பல்வேறு அதிநவீன வசதிகளுடன் இரண்டாம் நிலை மருத்துவமனை கட்ட ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை உதவியுடன் 45 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வந்த நிலையில் கடந்த மாதம் அனைத்து பணிகளும் முடிவுற்றது.

இந்நிலையில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை மருத்துவமனை கட்டிடத்தை சா.மு.நாசர் எம்.எல்.ஏ குத்துவிளக்கேற்றி மருத்துவமனையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். மேலும் புதிதாக நிறுவப்பட்டுள்ள சி.டி ஸ்கேன் அறை போன்றவற்றையும் ரிப்பன் வெட்டி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இங்கு அவசர சிகிச்சை பிரிவு, உள் நோயாளிகள் அறை, அறுவை சிகிச்சை அரங்கம், ஆய்வகங்கள், எம்.ஆர்.ஐ, சி.டி. உள்ளிட்ட ஸ்கேன்கள், எக்ஸ்ரே, இரத்த வங்கி, உள்ளிட்ட அனைத்து வசதிகளின் கூடிய சிறப்பு மருத்துவமனை திறக்கப்பட்டதால் ஆவடி மாநகர் மட்டுமின்றி சுற்றுவட்டார பகுதியில் இருக்கக்கூடிய 50 க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடைவர். திருவள்ளூர் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு அடுத்து ஆவடி மாநகரில் உதயமானது அதிநவீன அரசு மருத்துவமனை என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் மாநகர மேயர் ஜி. உதயகுமார், மாநகராட்சி ஆணையர் ஷேக்அப்துல் ரகுமான், மாநகர பொறுப்பாளர் சண்பிரகாஷ், மண்டல தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், ஜோதிலஷ்மி நாராயணபிரசாத், அம்மு விஜயன், பகுதி செயலாளர்கள் பொன்விஜயன், நாராயணபிரசாத், மாவட்ட பொருளாளர் ப.நரேஷ்குமார், பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ப.ச.கமலேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார், மருத்துவதுறை அதிகாரிகள் ஆவடி மாநகராட்சி அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் மருத்துவர்கள் செவிலியர்கள்பலர் கலந்து கொண்டார்கள்.

### பஹ்ரைன் வாழ் தமிழ் மாணவர்களின் நலன் கருதி

# 9 மற்றும் 10-ஆம் வகுப்புகளுக்கான 138 தமிழ் பாடப்புத்தகங்கள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கிட, எம்.எம்.அப்துல்லா எம்.பி. பெற்றுக்கொண்டார்!

சென்னை, மார்ச் 16-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பஹ்ரைன் வாழ் தமிழ் மாணவர்கள் நலன் கருதி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் 9 மற்றும் 10-ஆம் வகுப்புகளுக்கான 138 தமிழ் பாடப்புத்தகங்களை வழங்கினார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 15.3.2024 அன்று பஹ்ரைன் வாழ் தமிழ் மாணவர்கள் நலன் கருதி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு வரையிலான 138 தமிழ் பாடப்புத்தகங்களை வழங்கினார்.

இப்புத்தகங்களை மாநிலங்களவை உறுப்பினர்எம்.எம். அப்துல்லா பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர். கஜலட்சுமி மற்றும் இணை இயக்குநர் சங்கர சரவணன் ஆகியோர் உடன் இருந்தனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் 3 மண்டலம் 30வது வார்டில் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 1.43 லட்சம் மதிப்பீட்டி விநாயகபுரம் நவீன மின்சார இடுகாடு தகன மேடையை மாதவரம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.சுதர்சனம் திறந்து வைத்தார். உடன் மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், மாமன்ற உறுப்பினர் திருமலை ஜி.துரைசாமி பொறியாளர் செயற் பொறியாளர் ஜெயலட்சுமி, உதவி பொறியாளர் உலக அரசன், வட்டக் கழக செயலாளர் டி. சுந்தரம், வளர்மதி நகர் செல்வம், செகரட்டரி காலனி கர் சோம் செல்லையா திருமால் நகர் உமா மகேஸ்வரி, மருத்துவர் ஜி பார்த்தசாரதி வீதி மூர்த்தி, ஸ்ரீ ஹரிஷ், பிரசன்னா, டெல்லி வி பாஸ்கர் எஸ்.என். கோதண்டன், ஜெயசீலன் தனசேகர் கஜேந்திரன், ராஜேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

### புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரத்தில் முதல்வர் பிறந்த நாள் விழா! மாபெரும் மருத்துவ முகாம்!

## 500க்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்றனர்!

சென்னை, மார்ச் 16-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, மாபெரும் பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் எம்.ஆர்.எச் சாலையில் உள்ள ஜே.ஜே.ரெசிடென்சி ஹோட்டலில் மாபெரும் பொது மருத்துவ முகாம் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்றது.

சென்னை வடபழனியில் அமைந்துள்ள காவேரி மருத்துவமனையில் அடங்கிய மருத்துவர் குழுவினர் சிறப்பான இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்தனர். வருகை தந்த பயனாளிகளுக்கு உயரம், எடை, சர்க்கரையின் அளவு, ரத்த அழுத்தம் ஆகியவை பரிசோதனை செய்யப்பட்டு பின்னர் தகுதி வாய்ந்த மருத்துவர்கள் பரிசோதனை செய்து, அவர்களது ஆலோசனையின் பேரில் உயர்தரமான மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இதயம் சம்பந்தமான நோய்களுக்கு இசிஜி எடுக்கப்பட்டு அவர்கள் அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மருத்துவர்கள் ஆலோசனைகளை வழங்கினார்கள்.

வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, வட்டக் கழக நிர்வாகிகள் சி.மூர்த்தி, சி.பாலாஜி, மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என். அஜய் தென்னவன், எஸ். சிவகுமார், கே.சண்முகப்பிரியன், டி.வினோத், கே. ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வட பெரும்பாக்கம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சார்ந்த 300 தாய்மார்களுக்கு இலவசமாக சேலைகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் என். நாகராஜன், டி.திவாகர், ஜி.சுமிர், ஜி.முனிவேல்,ஜி. செல்வம், எம். மைக்கேல், பி.செந்தில், எம். கோவிந்தன், தீயம்பாக்கம் எம்.ஜான்சன், பூபாலன், சந்தோஷ், வடபெரும்பாக்கம் இ.கார்த்திக், இ.சுமன், ஆர்.மைலன், ஏ.பாலகிருஷ்ணன், ஜே.இளையபெருமாள், சண்முக சுரேஷ், வேலவன், கார்த்திக், டி.மாதவன், எஸ்.சசிகுமார், எம்.என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு, மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், மாபெரும் பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. 500க்கும் மேற்பட்டவர்கள் பயன் பெற்றனர், 300க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்கு புடவைகள் வழங்கப்பட்டது. கே.கருணாகரன், சி.மூர்த்தி, எம்.என்.அஜய் தென்னவன், எஸ்.சிவக்குமார், எம். மைக்கேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.




முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு, மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், மாபெரும் பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. 500க்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்றனர், 300க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்கு புடவைகள் வழங்கப்பட்டது. கே. கருணாகரன், சி. மூர்த்தி, எம்.என். அஜய் தென்னவன், எஸ் .சிவக்குமார், எம். மைக்கேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ்

# ரூ.4181 கோடி மதிப்பீட்டில் 219 திட்டப் பணிகள்!

## தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, மார்ச் 16 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.3.2024) சென்னை, தங்க சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், வடசென்னை பகுதிக்கு விரிவான வளர்ச்சியை உறுதி செய்திடும் வகையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பள்ளிக்கல்வித் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, காவல்துறை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மீன்வளத் துறை ஆகிய பதினோரு துறைகளை உள்ளடக்கி 4181.03 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 219 திட்டப் பணிகளை தொடங்கி வைக்கும் முதற்கட்டமாக 87 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். எஞ்சியுள்ள திட்டப் பணிகள் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். மேலும், வடசென்னை வளர்ச்சித் திட்டத்திற்கான இலச்சினையை வெளியிட்டார். முன்னதாக,

வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்பான புகைப்படக் கண்காட்சியை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

**வடசென்னை வளர்ச்சித் திட்டம்**

சென்னை மாநகரத்தின் சில பகுதிகளில், குறிப்பாக வடசென்னையில் போதிய அளவு அடிப்படை வசதிகளும், கட்டமைப்புகளும் இல்லாத நிலை உள்ளது. சென்னை மாநகரில் சமச்சீர் வளர்ச்சியை உறுதி செய்ய "வடசென்னை வளர்ச்சித் திட்டம்" என்ற திட்டத்தை 1,000 கோடி ரூபாய் செலவில் அடுத்த மூன்று ஆண்டுகளில் அரசு செயல்படுத்தும். இத்திட்டத்தில், கட்டமைப்பு பற்றாக் குறைகளையும் வளர்ச்சிக் குறியீடுகளின் குறை பாடுகளையும் கண்டறிந்து, அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று 2023 - 24ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

**வடசென்னை மேம்பாட்டிற்காகத் திட்டமிடப்பட்டுள்ள திட்டப்பணிகள்**

சென்னை முழுவதும் ஒரே சீரான மற்றும் விரிவான வளர்ச்சியை உறுதிசெய்வதற்கான முயற்சியில், பதினோரு வெவ்வேறு துறைகளை உள்ளடக்கிய முக்கியமான திட்டப்பணி களை செயல்படுத்துவதற்காக 4181.03 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வடசென்னையின் சீரான வளர்ச்சிக்குத் தேவையான முக்கியத் திட்டங்களைக் கண்டறியும் நோக்கில், பல்வேறு துறையைச் சேர்ந்த பொறுப்பாளர்களுடன் இணைந்து, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் (CMDA) நடத்தப்பட்ட மிக நுட்பமான கணக்கெடுப்பிலிருந்து மாற்றத்திற்கான இந்த புதிய முயற்சி உருவானது.

வடசென்னை முழுவதும் 3800க்கும் மேற்பட்ட நபர்களிடமிருந்து, விரிவான வினாப்பட்டியல் கணக்கெடுப்பு வாயிலாக சேகரிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அப்பகுதிக்கு உடனடியாகத் தேவைப்படும் திட்டங்கள் கண்டறியப்பட்டன. இந்த கணக்கெடுப்பு முடிவுகள், அப்பகுதி குடியிருப்பாளர்கள் சந்திக்கும் பிரச்சனை களைக் கண்டறிய உதவியதுடன் அப்பகுதியின் உட்கட்டமைப்பு பற்றாக்குறை இடைவெளிகளை விரிவாக மதிப்பிடவும் உதவி புரிந்தன. தொடர்புடைய துறைகளுடன் கலந்தாய்வுகள், அதிகளவிலான பலன்களை ஏற்படுத்திட உத்திசார் நிதி ஒதுக்கீட்டை உறுதி செய்து, முன்னுரிமை அடிப்படையிலான திட்டப் பணிகள் தொகுக்கப்பட்டன.

இந்தத் திட்டப் பணிக்கான நிதியின் ஒரு பகுதியாக, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமமானது, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்டங்களுக்கு 440.62 கோடி ரூபாயும், ஏனைய துறைகளின் திட்டங்களுக்கு 886.46 கோடி ரூபாயும் பங்களிக்கும். சம்பந்தப்பட்ட துறைகள், வாரியங்கள் மற்றும் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் வாயிலாக எஞ்சியுள்ள நிதிகள் அடுத்த இரண்டாண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்படும்.

வட சென்னையின் முக்கிய இடங்களில் "வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்" கீழ் வளர்ச்சியின் ஒரு பகுதியாக திட்டமிடப்பட்ட முக்கிய திட்டங்களில், மாதிரி பள்ளிகளை மேம்படுத்துதல், ஏற்கத்தக்க விலையில் வீடுகள், திறன் மேம்பாட்டு மையத்தை உருவாக்குதல், புதிய பேருந்து முனையங்கள் மற்றும் பணிமனைகளை தரம் உயர்த்துதல் மற்றும் கட்டுமானம், முக்கிய பகுதிகளில் துணை மின்நிலையங்களை நிறுவுதல், போதைப்பொருள் மீட்பு மறுவாழ்வு மையம் மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தை அமைத்தல், சிசிடிவி கேமராக்களை பொருத்துவதன் வாயிலாக பாதுகாப்பினை மேம்படுத்துதல், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக உயர்தர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானப் பணி, குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்றல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள், பொது பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், கடற்கரைகள், வணிக சந்தைகள், சலவையகம், குருதி சுத்திகரிப்பு மையங்கள் போன்ற உட்கட்டமைப்பு கட்டுமானங்களை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

**வட சென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகள் விவரம்**

வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் 1034.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16 திட்டப்பணிகள், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 1071.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 86 திட்டப்பணிகள், சென்னைப் பெருநகர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் 946.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 49 திட்டப்பணிகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் 440.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 28 திட்டப்பணிகள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 287.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 23 திட்டப்பணிகள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 287.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 4 திட்டப்பணிகள், கல்வித் துறை சார்பில் 57.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2 திட்டப்பணிகள், காவல் துறை சார்பில் 28.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 6 திட்டப்பணிகள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 திட்டப்பணி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில் 2.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 திட்டப் பணிகள், மீன்வளத் துறை சார்பில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 திட்டப் பணி, என மொத்தம் 4181.03 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 219 திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் வடசென்னையின் உட்கட்டமைப்பை மேம்படுத்தி, அப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இந்த ஒருங்கிணைந்த முயற்சிகள் வழிவகுக்கும்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, தங்கம் தென்னரசு, மா. சுப்பிரமணியன், பி. கே. சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி வி. கணேசன், மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மரு. கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், தாயகம்கவி, இ. பரந்தாமன்,

ஜான் எபிநேசர், அ.வெற்றியழகன், ஐட்ரீம் மூர்த்தி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், உயரதிகாரிகள் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், திருமதி காகர்லா உஷா, முனைவர் தா. கார்த்திகேயன், அன்சுல் மிஸ்ரா, அரசு துறைச் செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## 'சூப்பர் ட்ரீ' கோபுரம் - கண்ணாடி மாளிகை உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்களுடன் - உலகத் தரத்தில்

# சென்னையில் ரூ.25 கோடியில் - 'கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா'

## பணிகளை – வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் பார்வையிட்டார்!

**சென்னை, மார்ச் 16-**

**உலகத்தரத்துடன் சூப்பர் ட்ரீ கோபுரம், கண்ணாடி மாளிகை, உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் சென்னையில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுவரும் கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவிற்கான பணிகளை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

அதன் விபரம் வருமாறு:-

சென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில், வேளாண் தோட்டக்கலை சங்கம் என்ற தனியார் அமைப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த 1000 கோடி ரூபாய் மதிப்பிலான 6.09 ஏக்கர் நிலமானது நெடு நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு தமிழ்நாடு அரசால் மீட்கப்பட்டு, 2023ஆம் ஆண்டு தோட்டக்கலைத் துறைக்கு சென்னை மாவட்ட நிர்வாகத்தால் ஒப்படைக்கப்பட்டது.

இந்த இடத்தில் உலகத்தரம் வாய்ந்த பூங்காவினை அமைத்திடும் வகையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.8.2023 அன்று சுதந்திர தின விழாவில் ஆற்றிய உரையில், "சென்னையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் "கலைஞர் நூற்றாண்டு பூங்கா" ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுவரும் கலைஞர் நூற்றாண்டு பூங்காவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.2.2024 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். உலகத்தரத்துடன் சூப்பர் ட்ரீ கோபுரம், கண்ணாடி மாளிகை,

உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் கலைஞர் நூற்றாண்டு பூங்காவிற் கான பணிகளை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் நேற்று (15.03.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சென்னை, கதீட்ரல் சாலை செங்காந்தள் பூங்கா அருகில் நேற்று (15.03.2024) வேளாண்மை – உழவர் நலத் துறை சார்பில் 6.09 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.25 கோடி செலவில் அமைக்கப்பட்டுவரும் "கலைஞர் நூற்றாண்டு பூங்காவிற்கான பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி. குமாரவேல்பாண்டியன், வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**பூங்காவின் சிறப்பு அம்சங்கள்! கண்ணாடி மாளிகையில் பசுமை குடில்!**

கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவில் அமைக்கப்படவுள்ள கண்ணாடி மாளிகை 40 மீட்டர் நீளமும், 13 மீட்டர் அகலமும், 12 மீட்டர் உயரமும் கொண்டது. இக்கண்ணாடி மாளிகையில் வண்ணமயமான மலர்கள், அழகிய தாவரங்கள் கொண்ட 'பசுமைக் குடில்' அமைக்கப்படும். இந்தக் கண்ணாடி மாளிகையின் கட்டடக்கலை அமைப்பு, பார்வையாளர்களுக்கு அழகிய பசுமை சுற்றுச்சூழலைக் காண வழிவகுப்பதுடன், திறந்த மற்றும் காற்றோட்டமான சூழலையும் வழங்குகிறது.

இந்தியாவில் முதல்முறையாக இப்பூங்காவில் சூப்பர் ட்ரீ டவர் பத்து மாடிகளுடன் 105 அடி உயரம் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது. இந்த சூப்பர் ட்ரீ டவர் கோபுரம் முழுவதும் குளிர்சாதன வசதி கொண்டதோடு, மின் தூக்கி வசதியுடனும் அமைக்கப்படவுள்ளது இக்கோபுரத்தின் மேல் தளத்தில் 40 மீட்டர் சுற்றளவுடன் சுமார் 100 நபர்கள் நின்று பூங்காவையும், சென்னை மாநகரின் அமைப்பையும் கண்டு ரசிக்கும் வகையில் அமைக்கப் படவுள்ளது.

**அதிநவீன தோட்டக்கலை அருங்காட்சியகம்**

கலைஞர் நூற்றாண்டு பூங்கா வளாகத்தில் அதிநவீன தோட்டக்கலை அருங்காட்சியகம் அமைக்கப்படவுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் அரிய வகை தாவரங்கள், பூக்கள், போன்றவை காட்சிப்படுத்தப்படும். இதன்மூலம், மாணவர்கள், தாவரவியல் அறிஞர்கள், தோட்டக்கலை வல்லுநர்கள் மற்றும் பொதுமக்கள் தோட்டக்கலையின் சிறப்புகளை அறிய பேருதவியாக இருக்கும்.

இப்பூங்காவில், நடைபாதை, பார்வையாளர்கள் அடர்ந்த பசுமையான புல்வெளிகள் மற்றும் அமைதியான நீர்நிலைகளுக்கு இடையே நடந்து செல்வதற்கான வசதி, போன்ற பல்வேறு வசதிகளுடன் அமைக்கப் படவுள்ளது.

**கம்பிவட ஊர்தி (Rope Car)**

இப்பூங்காவில் 70 மீட்டர் நீளம் கொண்ட சிறிய வகையிலான கம்பிவட ஊர்தி அமைக்கப்படவுள்ளது. இந்த தனித்துமான உள்ளமைவு, பார்வையாளர்கள் கம்பிவட ஊர்தியில் தாவரங்களுக்கு அருகில் நெருக்கமாக பயணிக்கும் அனுபவத்தை அளிக்கும்.

Steel Pergola மற்றும் மலர் குகை

இப்பூங்காவில் அழகிய எஃகு பெர்கோலாக்கள் எனப்படும் அலங்கார கொடி அமைப்பு மற்றும் அழகிய மலர்களைக் கொண்ட குகையும் அமைக்கப்படவுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளை விளக்கும் வகையில் கலைஞர் நூற்றாண்டு பூங்காவில் 1.2 மீட்டர் அகலம் மற்றும் 2.4 மீட்டர் உயரம் கொண்ட கிரானைட் பலகைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

**சிறப்பு நுழைவு வாயில் வளைவு**

கலைஞர் நூற்றாண்டு பூங்காவின் நுழைவு வளைவு சுற்றுச்சுழலுக்கு உகந்த அழகியலைக் கொண்டிருக்கும் வகையில் அமைக்கப்படவுள்ளது. இந்தப் பச்சை வளைவு நுழைவு வாயில் கட்டடக்கலை, பூங்காவின் பசுமையான நிலப்பரப்புகளை வசீகரிக்கும் விதமாக வடிவமைக்கப்படும்.

இப்பூங்காவில், ரோஜா, செம்பருத்தி, காகிதப்பூ, மல்லிகை, சாமந்தி, செவ்வந்தி, ஆர்கிட்ஸ், ஆந்தூரியம், சூரியகாந்தி, பெட்டூனியா, அல்லி, தாமரை போன்ற மலர் வகைகளும், இன்ன பிறகு அழகு செடிகள், கொடி வகைகள், நறுமண பயிர்கள், புல்தரை, மூங்கில் தோட்டம் ஆகியன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மேலும், பசுமை நிலப்பரப்பு, நீரூற்று வசதி, கழிப்பறை தொகுப்பு, சிற்றுண்டியகம், மழைநீர் சேகரிப்பு வசதி, அலங்கார மின்விளக்கு வசதிகள், பார்வையாளர்கள் அமர்வதற்கான இருக்கை வசதிகள் போன்ற வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது. இப்பூங்காவின் கட்டுமானப் பணிகள் பிப்ரவரி 2025க்குள் முடிக்கப்படும்.

"கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா" அமைக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வரும் போது, சென்னை மக்களுக்கு சிறந்த பொழுதுபோக்கு இடமாக மட்டுமின்றி, சென்னை மாநகரின் சுற்றுச்சூழலையும் இப்பூங்கா மேம்படுத்தும்.

---

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை!

# கயல் தினகரன் நினைவேந்தல் நிகழ்ச்சி!

## படத்தை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. திறந்து வைத்து சிறப்புரை!

*சென்னை, மார்ச் 16 -*

*கழக இலக்கிய அணி முன்னாள் தலைவர் கயல் தினகரன் நினைவேந்தல் நிகழ்ச்சி நாளை (17.03.2024- ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.30 மணியளவில் முத்தமிழ் பேரவை, டி. என்.இராசரத்தினம் கலையரங்கம் துர்காபாய் தேஷ்முக் சாலை, இராஜா அண்ணாமலை புரத்தில் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்ச்சியில் கயல் தினகரனின் புதல்வர்கள் தி.தமிழ்ச்செல்வன், தி.செழியன் ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சிக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., அன்னாரது படத்தினை திறந்து வைத்து பேருரையாற்றுகிறார்.*



*இந்நிகழ்ச்சியில் குன்றக்குடி ஆதீனம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கழக செய்தி தொடர்புத் தலைவர் டி. கே.எஸ்.இளங்கோவன், திராவிடர் கழக துணைத் தலைவர் கலி.பூங்குன்றன், தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன், கவிதா பதிப்பகம் - தலைவர் சேது சொக்கலிங்கம் ஆகியோர் நினைவுரையாற்றுகின்றனர்.*

*திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் நன்றி கூறுகிறார். முன்னதாக கழக மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பனின் இசையஞ்சலி நடைபெறுகிறது.*



திருவள்ளூர் மாவட்டம் ஆர்கே பேட்டை ஒன்றியத்துக்கு உட்பட்ட அஸ்வரேந்தபுரம், எரும்பி, விடியங்காடு ஆகிய பகுதியில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு 13 கோடி 66 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 30 காங்கிரட் வீடுகள் கட்டகட்டுமான பணியை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார் உடன் ஒன்றிய கழக செயலாளர் பெ.பழனி, சி.என்.சண்முகம், ஒன்றிய குழு தலைவர் ரஞ்சிதா ஆவண்ணன், மற்றும் நிர்வாகிகள் திலகவதி ரமேஷ், ஆனந்தி செங்கோட்டவன், மோனிஷா சரவணன், கீதா பொன்னுரங்கம் புகழேந்தி, சங்கரன், சீராளம், சிவா, தாமோதரன், அன்பு, கார்த்திக், குணா உள்பட பலர் உள்ளனர்.



கொளத்தூரில் நடைபெற்ற பாக முகவர்கள் கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத் திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு. தயாநிதிமாறன் எம்.பி., கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி 46வது வட்ட கழகம் சார்பில் வட்ட செயலாளர் வி.முருகன் தலைமையில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவி வழங்குதல் நிகழ்ச்சி நடைபெற்றது கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை ஆற்றினார். சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் க.ஜெயராமன்,இரா. நரேந்திரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், சி.ஆனந்திஎம்.சி, ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி எம்.சி., ஏ.தமிழ்ச்செல்வன், டி.கமலகண்ணன், வி.வேதா, ஆர்.ஜோதிமணி, கேபிள் கே.தினகரன், த.ஆறுமுகம், ஆர்.எஸ்.மனோகரன், ஜி.கே.இ.செந்தமிழரசு, இரா.அரிதாஸ் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞரணியினர்,மகளிரணியினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கோடைகால வெப்பம் தணிக்க விழிப்புணர்வு:

# 1,196 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, மார்ச் 16-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (15.03.2024) சென்னை கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை, எழும்பூர், குழந்தைகள் நல மருத்துவமனையில் குழந்தைகளுக்கான பிரத்தியேக இரத்தம் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை மையம், திருநெல்வேலி மாவட்டம், கண்டியப்பேரி, அரசு புறநகர் மருத்துவமனை கட்டிடம், அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையில் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு கட்டிடம், திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அரசு மருத்துவமனை கட்டிடம் திறந்து வைத்து, அதன் பின்பு கோடைகால கடுமையான வெப்பம் மற்றும் வெப்ப அலை பாதிப்புகளை தடுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை தொடங்கி வைத்து, 1196 செவிலியர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கி விழா பேருரையாற்றினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

**மருத்துவத்துறை கட்டிடங்கள் – உபகரணங்கள்:**

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, திருநெல்வேலி மாவட்டத்தில் கண்டியப்பேரி அரசு மருத்துவமனையில் 46 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில், 60,695 சதுரடி பரப்பளவில், உயர்ந்த தொழில்நுட்ப மருத்துவக் கருவிகளுடன் கூடிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

அதேபோல் திருநெல்வேலி அம்பாசமுத்திரம் பகுதியில் 6 கோடியே 89 லட்ச ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு கட்டிடம் இன்றைக்கு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மேலும், திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் நவீன அரசு மருத்துவமனையில் 48 கோடியே 2 லட்சம் மதிப்பீட்டில் 54 ஆயிரத்து 400 சதுர அடி பரப்பளவில் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், விருதுநகர் மாவட்டத்தில் வருவாய் துறை அமைச்சர் அவர்களின் வாயிலாக 6 கோடியே 80 லட்சம் மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல கட்டிடம் இன்று திறந்து வைக்கப்பட்டது. சிவகாசியில் அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளில் ஒன்றாக இருந்த CT Scan நிறுவும் பணி முடிவுற்று 2 கோடியே 40 லட்சம் மதிப்பிலான அந்த கருவி தற்போது திறந்து வைக்கப்பட்டு இருக்கிறது. அதே போல் விருதுநகரில் ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் மருந்து கட்டுப்பாட்டு துறைக்கு சம்பந்தமான உதவி இயக்குநர் அலுவலகம் ஆகியவையும் தற்போது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

**வெப்பம் தணிக்க விழிப்புணர்வு**

கோடை காலம் துவங்கி இருக்கிற காரணத்தினால் கடுமையான வெப்ப அலை பாதிப்புகளை தடுப்பதற்கு என்ன மாதிரியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்கின்ற அறிவுறுத்தலும் விழிப்புணர்வுகளும் ஏற்படுத்தும் வகையில் ஒரு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. உடலில் நீர்ச்சத்து குறையாமல் இந்த கோடை காலத்தில் உடலில் உள்ள நீரின் அளவை பராமரித்து கொள்ள வேண்டும் என்பது அவசியமான ஒன்றாகும். எனவே உடலில் நீர்ச்சத்து குறையாமல் பராமரிக்க தேவையான அளவு தண்ணீர் குடித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்றும் பயனத்தின் போது குடிநீரை தவறாமல் எடுத்து செல்ல வேண்டும் என்றும், ORS எலுமிச்சை சாறு, இளநீர், மோர் மற்றும் பழச்சாறுகளை குடித்தல் போன்ற அறிவுறுத்தலும் இன்றைக்கு பொதுமக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாது பருவ கால பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை வீட்டில் சமைத்து உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். சிறு குழந்தைகள் தொடங்கி வயதானவர்கள் வரை காலை 11 மணிக்கு தொடங்கி பிற்பகல் 3 மணி வரை வெளியில் தேவையில்லாமல் வருவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் போன்ற விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

மேலும் நல்ல காட்டோற்றம் குளிர்ந்த இடங்களிலேயே இருப்பதற்கு பழகிக்கொள்ள வேண்டும், பாலியஸ்டர் துணிகளை உடுத்துவதற்கு பதிலாக மெல்லிய தளர்வான பருத்தி ஆடைகளை உடுத்துவது நல்லது போன்ற அறிவுறுத்தல்கள் பொது சுகாதாரத்துறை வெளியிட்டுள்ளது. வெளியில் செல்லும்போது காலணிகள் இல்லாமல் வெளியில் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. கடுமையான வெயிலில் தாக்கம் இருக்கின்ற சமயங்களில் கைகளில் குடைகளோடு எடுத்து செல்ல வேண்டும், சிறிய குழந்தைகள் மதிய வேளையில் வீட்டுக்கு வெளியில் விளையாட பெற்றோர்கள் அனுப்ப வேண்டாம் என்றும் அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக பெரிய சுற்றுலா மையங்களில் செயற்கை குளிர் பானங்கள் பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது. மது அருந்துதல் மற்றும் புகை பிடித்தல் போன்ற பழக்கங்கள் ஈடுபட்டிருப்பவர்கள் கோடை காலத்தில் இந்த பழக்கங்களை குறைத்து கொள்வது நல்லது என்ற அறிவுறுத்தலை பொது சுகாதார துறை வெளியிட்டுள்ளது. அதே போல் இந்த கோடை வெப்பத்தினால் பாதிக்கப் பட்டுள்ளவர்களுக்கு எந்த விதமான முதலுதவிகள் அளிக்க வேண்டும் போன்ற அறிவுத்தல்கள் வழங்கப்படுகிறது. அதிக வெப்பத்தினால் மயக்கம் ஏற்பட்டவர்களுக்கு நாம் உதவும் மனப்பான்மையினை பெற்றிருக்க வேண்டும். உடனடியாக 108 மற்றும் 104 என்ற எண்களோடு தொடர்பு கொண்டு, அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை செய்திட வேண்டும். கடும் வெயிலினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு, உடலில் மற்றும் தலையில் தண்ணீரை ஊற்றி ஆசுவாசப்படுத்தி, எந்த மாதிரியான பழங்களை உண்ண வேண்டும், மோர், கேழ்வரகு கூழ், இளநீர், எலுமிச்சை சாறு போன்ற பழரசங்களை உண்பது நல்லது போன்ற விழிப்புணர்வுகள் பொது மக்களுக்கு ஏற்படுத்தப்படுகிறது.

**1196 செவிலிர்களுக்கு பணிநியமன ஆணைகள்**

மக்கள் நல்வாழ்வுத்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பும் பணி மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் (MRB) மூலம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் 06.02.2024 அன்று 1021 மருத்துவர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, பணி ஆணைகள் வழங்கப்பட்டது. ஏறத்தாழ 15 நாட்கள் அவர்களுக்கு கால அவகாசங்கள் தரப்பட்டு, 85% பேர் பணியில் இணைந்துள்ளனர். 11/02/2024 அன்று 987 தற்காலிக செவிலியர்களுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டது. தற்காலிக செவிலியர்களில் 3000க்கும் மேற்பட்டவர்கள் 2019 ஆம் ஆண்டு தற்காலிகமாக 6 மாத காலம் என்ற தற்காலிக அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டவர்கள. இவர்கள் கோவிட் காலத்தில் பணியாற்றியவர்கள் என்பதால், முதலமைச்சர் அவர்கள் இவர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணியில் அமர்த்தும் நிலையை ஏற்படுத்தியுள்ளார்கள்.

தொடர்ச்சியாக 22.02.2024 அன்று 332 ஆய்வக நுட்புனர்களுக்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டது. இந்த நிலையில் இதனுடைய தொடர்ச்சியாக இன்று, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக 1196 பேருக்கு பணி ஆணைகள் தரப்படும் நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களை காலமுறை ஊதியத்தின் கீழ் இருந்து, அவ்வபோது காலிப்பணியிடங்கள் ஏற்படுவதற்கு ஏற்ப நிரந்தர செவிலியர்களாக பணிநியமனம் செய்து வருகிறோம். அந்த வகையில் 483 செவிலியர்கள் பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்பப்பட்டுள்ளது. தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்து வருபவர்களை காலிப்பணியிடங்கள் ஏற்படுவதற்கு ஏற்ப நிரந்தர அடிப்படையில் நிரப்பப்படும்.

**போலி குளிர்பானங்கள் விற்பனை**

உணவு பாதுகாப்பு துறை தொடர்ச்சியாக அனைத்து மாவட்டங்களில் உள்ள சுற்றுலா தளங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். போலியான குளிர்பானங்கள் விற்பனை செய்யப்படும் கடைகளின் தகவல்கள் கிடைத்து வருகிறது. கடந்த காலங்களில் கல் வைத்து பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்களின் தகவல் கிடைக்க பெற்றவுடன் உடனடியாக அதனை பறிமுதல் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இன்று வரை 9000 கடைகளில் பான்பராக், குட்கா போன்ற போதை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது கண்டறியப்பட்டு, அந்த கடைகள் மூடப்பட்டுள்ளது.

இதுபோன்ற கடைகளின் தகவல்கள் கிடைக்க பெற்றவுடன் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தர்பூசணி பழங்களில் செயற்கையாக நிரம் ஏற்றப்படும் செயல்கள் நடைபெற்று வருகிறது. இது தொடர்பாக அனைத்து மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது, கலப்படங்கள் கண்டறியப்பட்டால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.இளங்கோ மகேஸ்வரன், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்கு ழுத்தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மருத்துவத்துறை கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



கழகத் தலைவர்,தமிழ்நாடு முதல்வர், மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு. திருவொற்றியூர் மத்திய பகுதி தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமாகிய மாதவரம் எஸ்.சுதர்சனம், தலைமையில், சென்னை மாநகராட்சி மண்டல 2 வது குழு தலைவர் திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. சிறப்பு பேச்சாளர் கழக கொள்கை பரப்புச் செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ லியோனி இதில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.மா.அருள்தாசன், மாதவரம் மண்டல குழு தலைவர் நந்தகோபால், பகுதி கழக நிர்வாகிகள் முத்துசாமி, ஆர்.டி.ரமேஷ் குமார், தினகரன், துர்கா கோதண்டம், எம்.எஸ்.நாகலிங்கம், என்.கிருஷ்ணமூர்த்தி, செல்வராஜ், ஞானமூர்த்தி, விஜயரங்கன், ஸ்ரீதர் வட்டச் செயலாளர்கள் செல்வம், கணேசன், மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வகிகள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டார்கள்.

### யானைக்கவுனி பகுதியில்

# இரயில்வே மேம்பாலம் முடிவுற்ற ஒருவழிப்பாதை!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. திறந்து வைத்தனர்!

சென்னை, மார்ச் 16

யானைக்கவுனி இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியில் முடிவுற்ற ஒருவழிப் பாதையினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், வார்டு57க்குட்பட்ட யானைக்கவுனி பகுதியில் ரூ.71.26 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியில் முடிவுற்ற ஒருவழிப் பாதையினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் நேற்று (15.03.2024) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு 57ல் அமைந்துள்ள யானைக்கவுனி மேம்பாலமானது சென்ட்ரல் இரயில் நிலையம் மற்றும் பேசின் பிரிட்ஜ் இரயில் நிலையங்களுக்கு இடையே இருப்புப் பாதைகளுக்கு மேல் அமைந்துள்ளது. இந்தப் பாலம் வால்டாக்ஸ் சாலையையும், இராஜா முத்தையா சாலையையும் இணைக்கும் முக்கியமான போக்குவரத்து பாலமாகும். இப்பாலம் மிகவும் பழமையானதாகவும், பழுதடைந்த நிலையிலும் இருந்ததால் பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இப்பாலத்தில் 50 மீ. நீளமுள்ள பகுதி இரயில்வே துறையினரால் பராமரிக்கப்பட்டு வந்தது. தற்பொழுது, இந்தப் பகுதியை இடித்துவிட்டு 156.12 மீ. அளவிற்கு இரயில்வே துறையின் மூலம் பாலம் அமைக்கவும், பாலத்தின் இருபுறமும் 364.23 மீ. அளவிற்கு சாய்தள சாலை பெருநகர சென்னை மாநகராட்சியாலும் அமைக்க திட்டம் வகுக்கப்பட்டது.

அதனடிப்படையில், வால்டாக்ஸ் சாலையின் பக்கம் 165.24 மீ. மற்றும் இராஜா முத்தையா சாலையின் பக்கம் 198.99 மீ. நீளத்திற்கு சாய்தள சாலை மாநகராட்சியின் சார்பில் மூலதன நிதியின் கீழ், ரூ.30.78 கோடி மதிப்பிலும், இரயில்வே துறையின் மூலம் ரூ.40.48 கோடி மதிப்பிலும் இரயில்வே மேம்பாலம் அமைக்கப் பட்டு வருகிறது. இதில் வால்டாக்ஸ் சாலையிலிருந்து, ராஜா முத்தையா சாலையை சென்றடையும் வகையில் ஒழிவழிப் பாதை முடிக்கப்பட்டு இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி. எஸ். சமீரன், வட்டார துணை ஆணையாளர்கள். கட்டா ரவி தேஜா, (வடக்கு), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), மண்டலக் குழுத் தலைவர்பி. ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் ராஜேஷ் ஜெயின் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்! தினேஷ் மாணிக்கம் தலைமையில்

# இளைஞர் அணி சார்பில் அறுசுவை உணவு - நலத்திட்ட உதவிகள்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - எஸ்.ஜோயல் வழங்குகின்றனர்!

சென்னை, மார்ச் 16-

சென்னை தென் மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் நாயகரின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (16.03.2024 சனிக்கிழமை) மதியம் 12.00 மணிக்கு அண்ணை இல்லம் சீத்தம் மாள் சாலை ஆழ்வார் பேட்டை சென்னை 18 நடைபெறுகிறது.

தலைமை : தினேஷ் மாணிக்கம் மாவட்ட துணை அமைப்பாளர் இளைஞர்அணி முன்னிலை: மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி, , 123 வட்ட செயலாளர் மூ.இ.ஏழுமலை 122 அ வட்ட செயலாளர் அ.நாகராஜன் வரவேற்பு: ராஜா அன்பழகன், த.விக்னேஸ்வரன் எஸ்.உமா சங்கர் டேன்டி பிரகாஷ் எ. அஸ்வின் குமார்

உணவு மற்றும் நலதிட்டங்களை வழங்குபவர்: சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ., எஸ்.ஜோயல் மாநில இளைஞரணி துணை செயலாளர்

இதில் ஆ.சந்திரசேகர் ,நந்தனம் வேதா,மு.சத்தியா ,கே.மலர் , என்.அன்பழகன், ஜி.ஆர்.ராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக், ஏ.குமாரி, பா.பாக்கிய தாஸ், அகள்யவிஸ்வநாதன், ஜி.முருகையன் டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, ராஜாசுரேஷ்குமார், மூ.இராஜேந்திரன் மயிலை மேற்கு பகுதி துணை அமைப்பாளர்கள் ஆ. சிங்காரவேலு சி.வி. திவான் குமார் ஜெ.சக்திவேல் தா.தாமு நீ.ஜெய்குமார் எஸ்.பாலாஜி வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கு.லோக்கேஷ் ய.கார்த்திக் எஸ்.ஜெகன் பி.விக்கி,எஸ். மணி,மு.க.அஸ்வின்குமார் வி.தீனா,இ.வினோத் எஸ். மனோஜ் இளையசூரியா,மை.ஸ்டிபன் ராஜ், ரா.வேதராஜ்,ஜி.சினிவாசன், ஆ.மணிகன்டன்,கு. சிரஞ்சிவி, எம்.சதிஷ்,செ. லோகேஷ்,எம்.தினேஷ், கழக உடன்பிறப்புக்கள் பங்கேற்கின்றனர்.

நன்றியுரை: ந.உதயன் 123வது வட்ட அமைப்பாளர் வி.அருண்குமார் 122 'அ' வட்ட அமைப்பாளர்

நிகழச்சி ஏற்பாடு: தினேஷ் மாணிக்கம் மாவட்ட துணை அமைப்பாளர் இளைஞர்அணி

# நீலகிரி மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது!

நீலகிரி, மார்ச் 16-

நீலகிரி மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு உறுப்பினர்கள், நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள் அலோசனை கூட்டம் மாவட்ட திமுக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட கழக செயலாளர் பா. மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், நீலகிரி மாவட்டத்தில் எதிர்வரும் 17ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கூடலூர் சட்டமன்ற தொகுதியிலும், 18ம் தேதி குன்னூர் சட்டமன்ற தொகுதியிலும், 19ம் தேதி உதகை சட்டமன்ற தொகுதியிலும் நடைபெற உள்ள கழக செயல்வீரர்கள் கூட்ட நிகழ்ச்சிகள் சிறப்புடன் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மாவட்ட கழக அவை தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திராவிடமணி காசிலிங்கம், ராஜூ, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஷ்குமார், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, சேகரன், இளஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் லியாகத்அலி, பரமசிவன், லாரன்ஸ், காமராஜ், நெல்லைகண்ணன், பிரேம்குமார், பீமன், சுஜேஷ், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜ், சதீஷ், ரமேஷ், சஞ்சீவ்குமார், முத்து, சின்னவர், காளிதாஸ், மார்டின், ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

### காயிதே மில்லத் - கலைஞர் வழியில்

# எந்தக் காலத்திலும் சிறுபான்மை சமூக மக்கள் கழக குடும்பமாகத்தான் இருப்பார்கள்!

## மத்திய சென்னை ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நெகிழ்ச்சி!

சென்னை,மார்ச்.16–

**மத்திய சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் தயாநிதி மாறன் தலைமையில், ரம்ஜான் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு தொகுதி மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றினார்.**

அப்போது அவர் பேசியதாவது:

ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இதே அரங்கத்தில் 10 நாட்களுக்கு முன்பு ஒரு நிகழ்ச்சி நடந்தது. இப்போது இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன். வருடம் முழுவதும் நிகழ்ச்சி நடத்த முடியும் என்றால், அது சேகர்பாபுவால் மட்டுமே முடியும்.

### வளர்ச்சித் திட்டங்கள்

இன்றைக்கு மட்டும் அண்ணன் சேகர்பாபு அவர்கள் இரண்டு நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறார். மாலையில், முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட அரசு நிகழ்ச்சி. கிட்டத்தட்ட 4 ஆயிரம் கோடி ரூபாய் வடசென்னைக்கான வளர்ச்சித் திட்டங்கள். அந்த நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்துவிட்டு, இப்பொழுது இப்படி ஒரு சிறப்பான நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். அண்ணன் சேகர்பாபு அவர்களை விட்டால், 24 மணி நேரமும் நிகழ்ச்சி நடத்தக்கூடியவர்தான். வாரம் ஏழு நாட்களும் நடத்துவார். வருடம் 365 நாட்களும் எனக்குத் தெரிந்து நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்.

பொதுவாக நிகழ்ச்சியை முடித்துவிட்டுத்தான் என்னிடம் தேதி கேட்பார். இப்போது மேடையில் உட்கார்ந்து இருக்கும்போதே கேட்டுவிட்டார். நாளைக்கு மாலை, நீங்கள் கொளத்தூர் வர வேண்டும். நாளைக்கு நான் அங்கு ஒரு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்று தேதி கேட்டுவிட்டார். இப்படி பல நிகழ்ச்சிகளை நடத்தமுடியும் என்றால், அண்ணன் சேகர்பாபுவால் மட்டுமே முடியும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் மக்கள் நலத்திட்ட நிகழ்ச்சிகள் அதுவும் பார்த்தீர்கள் என்றால், சிறுபான்மை மக்களுக்கு இன்றைக்கு வேட்டி, சேலை, லுங்கி, 26 கிலோ அரிசி, பேரீச்சைப்பழம் இது தவிர, நலத்திட்ட உதவியாக 2,500 ரூபாய் கொடுக்கிறார்.

### விழா நாயகன்

நான் கேட்டேன், `இந்த நிகழ்ச்சி எத்தனை வருடங்களாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று. நான் இப்போதுதான் 30 வருடமாக நடத்திக்கொண்டிருக்கிறேன் என்றார். அந்த அளவிற்கு `விழா நாயகன்' என்றால், நம் தலைவர் அவர்களால் தொடர்ந்து பாராட்டப்பெற்றவர்தான். நான் சொல்லத் தேவையில்லை. உங்கள் அத்தனைப்பேரையும் அடிக்கடி பார்க்கிறேன் என்று நினைக்கிறேன்.

நிறைய இடத்திற்கு போகும் போது சொல்வார்கள் `என்னங்க என்ன பிரச்சனை என்றாலும், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி என்றால், உடனே தீர்த்து வைத்து விடுகிறீர்களாமே, நிறைய நலத்திட்ட உதவிகள் கொடுக்கிறீர்களாமே, என்று சொல்வார்கள்.

இப்போது என் தொகுதி சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியைவிட, இந்த மாவட்டத்திற்குக் குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால், இந்தத் துறைமுகம் பகுதிக்குத்தான் நான் அதிக முறை வந்திருக்கிறேன். அதையும் நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். தொகுதி மாறி, நான் உங்கள் தொகுதிக்கு வந்து விடுகிறேன். வந்தால், கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இப்போது தொகுதி மாறுகிறேனோ இல்லையோ, முதலில் வீடு மாற வேண்டும்.

### எழுச்சியான வரவேற்பு

ஒவ்வொரு முறை இந்த மாவட்டத்திற்கு வரும்போதும் நீங்கள் கொடுக்கின்ற எழுச்சியான வரவேற்பு. அது ஒருமுறைகூட குறைந்தது கிடையாது. ஒவ்வொரு முறையும் உங்கள் அன்பும் எழுச்சியும் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன. இன்றைக்கு இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்கள். ரம்ஜான் பண்டிகைக்கு மட்டும் நடத்தவில்லை. தீபாவளி பண்டிகைக்கும் அவர் நடத்தினார். கிறிஸ்துமஸ்துக்கும் நடத்தினார். தலைவர் பிறந்தநாளுக்கும் நிகழ்ச்சி நடத்தினார். வருடம் முழுவதும் நடத்தியிருக்கிறார்.

### முக்கியமான ஒரு தேர்தல்

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல், உங்களுக்கே தெரியும் மிக மிக முக்கியமான ஒரு தேர்தல். நம் முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள், சி.ஏ.ஏ. (C.A.A) சட்டம் கொண்டு வரும்போது, 2019ஆம் ஆண்டு எதிர்த்தார். அதற்கு முதல் குரல் கொடுத்தது நம் தலைவர் தான். குரல் கொடுத்த கட்சி திராவிட முன்னேற்ற கழகம்தான். எனக்கு அதில் என்ன கூடுதல் பெருமை என்றால், நான் அரசியல், பொது வாழ்க்கைக்கு வந்து முதன்முதலில் கைது செய்யப்பட்டது, எப்போது தெரியுமா? அ.தி.மு.க ஆட்சியில் இந்த சி.ஏ.ஏ. (C.A.A) சட்ட நகலைக் கிழித்துப்போட்டு, ஒரு நாள் முழுக்க சிறையில் இருந்தேன். அதை என் வாழ்க்கையில் மிகப் பெருமையாகச் சொல்வேன்.



அப்போது இந்த சி.ஏ.ஏ. (C.A.A) சட்டம் வரும்போது தெரிந்தே ஆதரித்தது யார்? கூட்டணியில் இருந்த அ.தி.மு.க. இப்போது எதுவுமே தெரியாத மாதிரி, `கூட்டணி தர்மத்துக்காக நாங்கள் செய்தோம்' என்று வாய் கூசாமல் பொய்ச் சொல்லிக்கொண்டு உங்களிடம் வருவார்கள். நம்பாதீர்கள்.

### செல்லப் பிள்ளை

இன்றைக்கு ஒன்றிய அரசு அந்தச் சட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று சொல்லிவிட்டது. நம் முதலமைச்சர் தெளிவாகச் சொல்லிவிட்டார். தமிழ்நாட்டில் என்றைக்குமே சி.ஏ.ஏ சட்டத்தை அமல்படுத்த மாட்டோம் என்று இந்தியாவிலேயே முதல் குரல், முதல் முதல்வர், நம் கழக தலைவர் அவர்கள்தான். எனவே, எப்பொழுதுமே எந்த காலத்திலும் சிறுபான்மை மக்கள் நம் கழகக் குடும்பமாக இருக்கும். கிட்டத்தட்ட இது ஒரு குடும்ப நிகழ்ச்சிதான். வரும்போது நிறைய பேர், `பட்ட பெயர்' எல்லாம் வைத்துக் கூப்பிட்டார்கள். நான் எப்பொழுதும் சொல்வது ஒன்றுதான். இந்த அமைச்சர், இளைஞர் அணிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் எல்லாம் இன்றைக்கும் வரும் நாளைக்கு போய்விடும். அவை நிரந்தரமே கிடையாது. எது தெரியுமா நிரந்தரம்?

நான் எப்பொழுதும் உங்கள் வீட்டுச் செல்லப்பிள்ளையாக அதுவும் இந்தக் கிழக்கு மாவட்டத்திற்கு மிகவும் செல்லப்பிள்ளையாக, அதுவும் இந்தத் துறைமுகம் தொகுதிக்குச் செல்லப்பிள்ளையாக கடைசிவரை இருப்பேன் என்று கூறிக் கொள்கிறேன்.

முஸ்லிம் தலைவர் காயிதே மில்லத்

கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போதும் நம் முஸ்லிம் தலைவர் காயிதேமில்லத் அவர்கள் உடல் நலமில்லாமல் இருந்தார். கலைஞர் அப்போது கோயம்புத்தூரில் கழக நிகழ்ச்சியில் இருந்தார். அவருக்கு உடம்பு சரியில்லை என்று தெரிந்தவுடன், கலைஞர் அவர்கள் அவர் நிகழ்ச்சிகளையெல்லாம் ரத்து செய்துவிட்டு, சென்னைக்கு வந்து அவரை வீட்டில் சென்று சந்தித்தார்.

### இஸ்லாமிய சமூக மக்கள்

அப்போது காயிதே மில்லத் அவர்கள், கலைஞர் அவர்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு எங்கள் இஸ்லாமிய மக்களுக்காக நீங்கள் செய்தமாதிரி உதவி எந்த முதல்வரும் செய்ததில்லை. நான் மறைந்து விடுவேன் எனக்கு உடல்நிலை சரியில்லை. அப்படி நான் இறந்து போன பிறகு எங்கள் இஸ்லாமிய சமூக மக்களை நீங்கள்தான் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கலைஞரின் கைகளைப் பிடித்து சொன்னார்.

கலைஞர் விட்டுச்சென்ற பணியை இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செய்கிறார். உங்களுக்கு எப்போதுமே ஒரு பாதுகாப்பு அரணாக இருப்பது, நம் திராவிட முன்னேற்ற கழகமும் நம் தலைவரும்தான். தேர்தல் நேரம் வந்துவிட்டது. நாங்கள் தெளிவாக இருக்கிறோமோ இல்லையோ, இஸ்லாமிய சமுதாய மக்களான நீங்கள் எப்பொழுதுமே தெளிவான முடிவுதான் எடுப்பீர்கள்.

அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் தமிழ்நாட்டிலேயே அறிவிக்கப்படாத ஒரு வேட்பாளர். உங்கள் தொகுதிக்கு யார் வேட்பாளர் என்று உங்களுக்கே தெரியும். சென்ற முறை பெற்ற வாக்கு வித்தியாசத்தை விட, அதிகமாக வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும். தேர்தலுக்கு தேர்தல் மட்டும் வருகின்ற கட்சி தி.மு.க கிடையாது.

இப்போது இந்த 10 நாட்களில் மட்டும் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் நான்கு முறை வந்திருக்கிறார். இதற்கு முன்பு வந்தாரா? மழை பெய்தது, வந்தாரா? எட்டிக் கூடப் பார்க்கவில்லை. ஒன்றிய நிதியமைச்சர் வந்தார். ஆனால், நிதி வரவில்லை. ஆனால், நம் கழகத் தலைவர் அவர்கள் நிதி உதவி வழங்கினார். சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டம் அதேபோல் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் எல்லாம் பெரிய பாதிப்பு.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆறாயிரம் ரூபாய் மக்கள் கேட்காமலேயே கொடுத்தார் நம் தலைவர் அவர்கள். அதுமட்டுமல்லாமல், அரசு மட்டும் இல்லாமல், இயக்கத்தின் சார்பாகவும் களத்தில் மக்களோடு மக்களாக நின்று பணியாற்றியது திராவிட முன்னேற்றக் கழகம். அதற்கு எங்களுக்குத் துணை நின்றது இஸ்லாமிய பெருமக்கள்தான். உங்களுக்கும் என் பாராட்டுகள்.

### 37 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு

ஆனால், இப்போது தொடர்ந்து பார்த்தீர்கள் என்றால் மோடி இந்த 10 நாட்களில் மட்டும் நான்குமுறை வந்து வடை சுட்டுக்கொண்டு இருக்கிறார். நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராக ஒன்றிய அரசிடம் கேட்டது இவ்வளவு பெரிய பாதிப்பு, 37 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு ஏற்பட்டிருக்கிறது. நிதி கொடுங்கள் நாங்கள் மக்களுக்குத் தரவேண்டும் என்று கேட்டார். இதுவரைக்கும் ஒன்றிய அரசு கொடுக்கவில்லை. ஆனால் நம் தலைவர் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 6 ஆயிரம் கொடுத்திருக்கிறார். அதை நீங்கள் மறந்து விடாதீர்கள்.

### ஐந்தரை லட்சம் ரூபாய்

நம் தமிழ்நாட்டில் இருந்து வரியாகக் கட்டுகின்ற ஒவ்வொரு ரூபாய்க்கும் திருப்பி ஒன்றிய அரசு எவ்வளவு தெரியுமா தருகிறது. நாம் ஒரு ரூபாய் கட்டினால், நமக்கு திருப்பி தருவது வெறும் 28 பைசா. கடந்த 5 வருடத்தில் வரியாக நாம் ஐந்தரை லட்சம் ரூபாய் கட்டியிருக்கிறோம். ஆனால், நமக்கு எவ்வளவு தெரியுமா கொடுத்திருக்கிறார்கள், வெறும் ஒன்றரை லட்சம் கோடி.

பா.ஜ.க ஆளுகின்ற அந்த மாநிலங்களுக்கெல்லாம் அதிக நிதி கொடுக்கிறார்கள். கேட்காமலேயே கொடுக்கிறார்கள். குஜராத்தில் வெள்ளம் வரும்போது ஒன்றிய பிரதமர் அடுத்த நாளே அங்கு சென்று நிதி கொடுத்தார். எனவே, நீங்கள் அத்தனைப்பேரும் எப்படி சென்றமுறை ஒரு நல்ல முடிவை எடுத்தீர்களோ, அதேமாதிரி இப்போதும் செயல்படுங்கள். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் தேதி, எனக்குத் தெரிந்து நாளையோ, நாளை மறுநாளோ அறிவித்து விடுவார்கள்.

### 40 நாட்கள் பிரச்சாரம்

நான் இங்கே முக்கியமாக வந்தது. அடுத்த 40 நாட்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட போகிறேன். எனவே, உங்களின் வாழ்த்துகளோடு தேர்தல் பிரச்சாரத்தை துறைமுகம் தொகுதியில் கிழக்கு மாவட்டத்தில் ஆரம்பிப்பதே எனக்கு மிகப்பெரிய பெருமை என்று கூறிக்கொண்டு, இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, வந்திருந்த அத்தனைப் பேருக்கும் என் ரம்ஜான் வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

அமைச்சர் பி.கே. சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ராஜசேகர், முரளி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் விஜயகுமார், ஜி.எம்.தேவன், ஸ்ரீராமுலு, இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், அயலக அணியின் துணைச் செயலாளர் பரிதி இளம் சுருதி, சிறுபான்மை அணியின் மாநிலத் துணைச் செயலாளர் ஷேக் அப்துல்லா, மாவட்டத் துணை அமைப்பாளர் புகாரி,

டான் பாஸ்கோ பள்ளியின் முதல்வர் கிரகரி தேவராஜ், கனி, கலைச்செல்வி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் லோகேஷ், விஜயகுமார், விநாயகம், பிரதீப்குமார், சம்பத், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெகதீஷ், விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலச் துணைச் செயலாளர் கௌதம், மாமன்ற உறுப்பினர்கள் ஆசாத், பரிமளம், நவீன், ரங்கீலா ராஜேஷ், கதிரவன் என்கிற ராஜா, பரத்குமார், தொழிலதிபர் பக்கீர்பாய் உள்பட கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் 6.98 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 90.50 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலைய பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, ஒன்றிய குழுத் தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், ஒன்றியச் செயலாளர் வீ.தமிழ்மணி, பையனூர் சேகர், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மைநலஉரிமைபிரிவு சார்பில் புனித ரமலான் முன்னிட்டு மாவட்டஅமைப்பாளரும், தலைமைகழக பேச்சாளருமான சைதை சாதிக் தலைமையிலும் சைதை மேற்கு – கிழக்கு பகுதி கழகசெயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.சி., எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், சைதை மா.அன்பரசன், முன்னிலையில் சைதாப்பேட்டை வி.ஜி.பி சாலையில் உள்ள அன்னை வேளாங்கண்ணி மகளிர் கலை கல்லூரியில் வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் மருத்துவ மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் 1000 குடும்பங்களுக்கும், மற்றும் பள்ளிவாசல் இமாம் பெருமக்களுக்கு நலத்திட்டஉதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். மாநில சிறுபான்மை பிரிவுசெயலாளர் டாக்டர்சுபேர்கான், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., பாலவாக்கம்மு.மனோகரன், மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார் எம்.சி., ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ் உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பகுதிகழக நிர்வாகிகள், வட்டகழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட துணைஅமைப்பாளர்கள், பகுதிஅமைப்பாளர்கள், பகுதிதுணை அமைப்பாளர்கள், வட்டகழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சென்னை 16.03.2024 முரசொலி 9





## மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா

சூரியச் சுடர் – 70

**புதிய புறநானூறு! திராவிட வரலாறு!!**

நாள் : 16.03.2024 சனிக்கிழமை
நேரம் : மாலை 6.00 மணி
இடம் : முத்தையால்பேட்டை மேல்நிலைப்பள்ளி அருகில்



தலைமை **ஜி.எம்.தேவன்**
மாவட்ட துணைச் செயலாளர்

முன்னிலை

திரு. **பி.கே.சேகர்பாபு**
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை
(ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்

திரு. **தயாநிதிமாறன்** எம்.பி
கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர்
கழக விளையாட்டு மேம்பாட்டு அணிசெயலாளர்

எஸ்.இராஜசேகர் எஸ்.முரளி
எம்.விஜயகுமார் ப.ஸ்ரீராமுலு எம்.சி இசட்.ஆசாத் எம்.சி
NPM.சேக்அப்துல்லா இப்ராஹிம்கனி
ஆர்.கலைச்செல்வி பா.ஜெகதீஷ் பி.விஜயகுமார்
எம்.வினாயகம் பா.பிரதீப்குமார் எஸ்.சம்பத்குமார்

கவியரங்கத்தை துவக்கிவைப்பவர்

திரு. **ஆர்.எஸ்.பாரதி**
கழக அமைப்புச் செயலாளர்

கவியரங்கத்தலைமை
**பேராசிரியர் அப்துல்காதர்**

கவிப்பாடுவோர்
கவிஞர் கபிலன் கவிஞர் விவேகா
கவிஞர் நெல்லை ஜெயந்தா
கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி
கவிஞர் தனிக்கொடி
கவிஞர் தமிழ்மணவாளன்

மேயர் பிரியாராஜன் | க.பிரபு


நன்றியுரை ஆ.நா.பார்த்திபன் க.கவியரசு
60 அ வட்ட செயலாளர் 60வது வட்ட செயலாளர்



அன்புடன் : **சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க**

Star Signs
044 - 43 55 48 47

---



## மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா

சூரியச் சுடர் – 41

**எளியவர் வாழ்வு மேலோங்கட்டும்
தலைவர் புகழை கொண்டாடட்டும்**

நாள் : 16.03.2024 சனிக்கிழமை
நேரம் : காலை 6.30 மணி
இடம் : செல்லப்பா தெரு, ஓட்டேரி, சென்னை – 12



தலைமை
**எஸ்.சசிகுமார்**
76வது வட்ட கழக செயலாளர்

முன்னிலை

திரு. **பி.கே.சேகர்பாபு**
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை
மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்

திரு. **ப.தாயகம்கவி** எம்.எல்.ஏ
கழக துணை அமைப்புச் செயலாளர்

எம்.சாமிகண்ணு செ.தமிழ்வேந்தன்
சரிதாமகேஷ்குமார் எம்.சி இசட்.ஆசாத் எம்.சி
புனிதவதிஎத்திராசன் எம்.சி டி.லோகேஷ்
பி.உதயசங்கர் நா.துலுக்காணம்
எம்.பெரோஸ்கான் கா.ராஜ்முகமது
தமிழ்செல்வி சசிகுமார் எம்.சி ரமணிலோகேஷ் எம்.சி
பி.ஜெ.துளசிங்கம்


1500 நபர்களுக்கு
நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்

திரு. **எஸ்.ரகுபதி**
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்

மேயர் **பிரியாராஜன்**
**கலாநிதிவீராசாமி** எம்.பி
**பி.எம்.யாழினி**

நன்றியுரை
**எஸ்.வெங்கடேசன்** 76 அ வட்ட செயலாளர்

அன்புடன்
**76வது வட்டம், திரு.வி.க.தெற்கு பகுதி
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க**





மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (15.03.2024) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக வளாகத்தில் கோடைகால கடுமையான வெப்பம் மற்றும் வெப்ப அலை பாதிப்புகளை தடுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. தி.சி.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.இளங்கோ மகேஸ்வரன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத்தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மருத்துவத்துறை கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், மருத்துவப்பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் நடைபெற்ற "எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் 71வது பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் பகுதிச் செயலாளர் பி.குணாளன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் கழக மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தேர்தல் நன்கொடை பத்திரங்கள்

# பா.ஜ.க.வின் ஊழலை அம்பலப்படுத்தியுள்ளது!

## காங்கிரஸ் ஆதாரத்துடன் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 16-

தேர்தல் நன்கொடை பத்திரங்கள் பா.ஜ.கவின் ஊழலை அம்பலப்படுத்தியுள்ளதாக குற்றம்சாட்டியுள்ள காங்கிரஸ் கட்சி, நன்கொடை பத்திரங்களின் முழு விவரங்களை வெளியிட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்:

நேற்றிரவு எஸ்.பி.ஐ. வெளியிட்ட தேர்தல் நன்கொடை பத்திரங்களின் தரவு அடிப்படையில் கடந்த 2019ஆம் ஆண்டு முதல் மொத்தம் ஆயிரத்து 300 நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள், தேர்தல் பத்திரங்களை நன்கொடையாக வழங்கியுள்ளதாகவும், இதில் பா.ஜ.க.வுககு 6 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தல் நன்கொடை பத்திரங்கள் குறைந்தபட்சம் பாஜகவின் 4 ஊழல்களை அம்பலப்படுத்தியுள்ளதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குற்றம் சாட்டியுள்ளார். பல்வேறு நிறுவனங்கள் தேர்தல் பத்திரங்களை நன்கொடையாக அளித்து, உடனடியாக அரசாங்கத்திடமிருந்து பெரும் பலன்களைப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ள ஜெய்ராம் ரமேஷ்,

அ.மேகா இன்ஜினியரிங் மற்றும் இன்ஃப்ரா நிறுவனம் ஏப்ரல் 2023 இல், 140 கோடி ரூபாய் பாஜகவுக்கு வழங்கியதாகவும், ஒரு மாதம் கழித்து அந்த நிறுவனத்திற்கு 14 ஆயிரத்து, 400 கோடி மதிப்பிலான தானே போரிவலி இரட்டை சுரங்கப்பாதை திட்டம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். பி. ஜிண்டால் ஸ்டீல் நிறுவனம் 2022 அக்டோபர் 7 அன்று 25 கோடி ரூபாய் நன்கொடை வழங்கிய நிலையில், 3 நாட்களுக்குப் பிறகு, அவர்கள் கரே பால்மா நிலக்கரிச் சுரங்கத்தை பெற்றதாக ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய விசாரணை அமைப்புகளை சோதனை நடத்தி, பின்னர் அந்த நிறுவனங்களில் இருந்து பாஜக நன்கொடை பெற்றதாகவும், முதல் 30 நன்கொடையாளர்களில் 14 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2023 டிசம்பரில் ஷிர்டி சாய் எலக்ட்ரிக்கல்ஸில் வருமான வரித்துறை சோதனை நடத்தியதாகவும், 2024 ஜனவரியில் அவர்கள் தேர்தல் பத்திரங்கள் மூலம் 40 கோடி ரூபாய் பா.ஜ.க.வுக் நன்கொடை வழங்கியதாகவும் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். மேலும், மேகா இன்ஜினியரிங் & இன்ஃப்ரா நிறுவனம் 2020 அக்டோபரில் தேர்தல் நன்கொடை பத்திரங்கள் மூலம் 20 கோடி நன்கொடை வழங்கியதாகவும், 2020 ஆகஸ்ட் மாதம் அந்நிறுவனத்திற்கு 4 ஆயிரத்து 500 கோடி மதிப்பிலான ஜோஜிலா சுரங்கப்பாதை திட்டம் ஒதுக்கப்பட்டதாகவும், அதே நிறுவனம் 2022 டிசம்பரில் 56 கோடி நன்கொடை வழங்கி, அதே மாதம் பி.கே.சி. புல்லட் ரயில் நிலைய ஒப்பந்தத்தைப் பெற்றதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார். எஸ்.பி.ஐ வங்கி 2018 மார்ச் முதல் தேர்தல் பத்திரங்கள் விற்ற நிலையில், எஸ்.பி.ஐ வங்கி வழங்கியுள்ள தரவு 2019 ஏப்ரல் மாதத்தில் இருந்து மட்டுமே தொடங்குவதாகவும் தெரிவித்துள்ளார். இந்த தரவுகளில் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பத்திரங்கள் இல்லை. மார்ச் 2018 முதல் ஏப்ரல் 2019 வரை இந்த விடுபட்ட பத்திரங்களின் தரவு எங்கே? என்று கேள்வி எழுப்பியுள்ள ஜெய்ராம் ரமேஷ், பத்திரங்களின் முதல் தவணையில், பாஜக 95 சதவீத நிதியைப் பெற்றதாகவும், இதன் மூலம் பாஜக யாரை பாதுகாக்க பார்க்கிறது? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேர்தல் பத்திரங்களின் தனிப்பட்ட பத்திர அடையாள எண்களை வழங்க வேண்டும் என்றும், இதன் மூலம் நன்கொடையாளர்களை பெறுநர்களுடன் துல்லியமாக ஒப்பிட்டு பார்க்க முடியும் என்றும் ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார்.

### பழநியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு:

# இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் குழு!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, மார்ச் 16

பழநியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டினை சிறப்பாக நடத்திட இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு அமைத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இது குறித்த அரசாணை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக நடத்தப்படவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டினை சிறப்பாக நடத்திட இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் 20 உறுப்பினர்களைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த 27.02.2024 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு கூட்டத்தில்," தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் பெருமையை உலகில் உள்ள முருகபக்தர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அறுபடை வீடுகளில் ஒன்றான பழநியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு 2024ம் ஆண்டில் நடத்துவதெனதீர்மானிக்கப்பட்டது.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கு உலகம் முழுவதும் உள்ள சமயப் பெரியோர்கள், ஆன்மிக அன்பர்கள், முருக பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் விழா நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல், விளம்பரப் பணிகள் மேற்கொள்ளுதல், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல், வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் முக்கிய பிரமுகர்களை வரவேற்று, அவர்களுக்கான வசதிகளை செய்து தருதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் வகையில் இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் மற்றும் ஆன்மிகப் பெரியோர்களை கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுவின் துணைத் தலைவராக சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களும், உறுப்பினர் செயலராக இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்களும் உறுப்பினர்களாக பள்ளிக்கல்வித்துறை செயலாளர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர், கூடுதல் ஆணையர்கள், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், முதுமுனைவர் மு.வெ.சத்தியவேல் முருகனார், சு.கி.சிவம், திருமதி. தேச மங்கையர்க்கரசி, ந. இராமசுப்பிரமணியன், தரணிபதி ராஜ்குமார், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் க.சந்திர மோகன், திண்டுக்கல் மண்டல இணை ஆணையர் மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான ஒருங்கிணைப்புக் குழு அரசால் அமைக்கப்பட்ட பின்னர் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் தலைமையில் செயல்பாட்டுக் குழு அமைத்து தேவைக்கேற்ப ஆலோசனைக் குழு கூட்டங்கள் நடத்தப்படும்.



எதிர்வரும் மார்ச் 17, 18, 19 ஆகிய தேதிகளில் நீலகிரி மாவட்டத்தில் நடைபெற உள்ள செயல்வீரர்கள் கூட்டங்கள் சிறப்புடன் நடத்துவது குறித்து ஆலோசிக்க நீலகிரி மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், நகர ஒன்றிய கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்ட கழக அலுவலகம், உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது.

### 10 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில்

# தமிழ்நாட்டிற்கு ஒன்றுமே செய்யாத மோடி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி குற்றச்சாட்டு!

சென்னை, மார்ச் 16-

பத்து ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்த மோடி தலைமையிலான பி.ஜே.பி. ஆட்சி தமிழ்நாட்டுக்குச் செய்தது என்ன? ஒரு கண்ணுக்கு வெண்ணெய் இன்னொரு கண்ணுக்குச் சுண்ணாம்பு என்ற பாரபட்சம் காட்டுவது ஏன்? என்று முதலமைச்சர் பேசிய எழுச்சி உரையை எடுத்துக்காட்டி திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

'திராவிட மாடல்' ஆட்சியின் ஒப்பற்ற நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.3. 2024) வடசென்னை வளர்ச்சிக்கான 11 துறைகளை உள்ளடக்கிய 4181.03 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 219 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து ஆற்றிய விளக்கவுரையில், பல முத்தான கருத்துகளை முன்வைத்ததோடு, தமிழ்நாட்டிற்கு அடிக்கடி வந்து வாக்கு சேகரிக்கும் பிரச்சாரத்தில் ஈடுபடும் பிரதமர் மோடி அவர்களை நோக்கிய, தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒலிக்கும் வகையில், சில வினாக்களை விடுத்ததோடு, "பிரிவினைவாதிகள்'' என்று வீண்பழிபோடுவதையும், ஆதாரமற்ற பொல்லாங்கு பேச்சு என்பதையும் நன்கு விளக்கியுள்ளார்!

**பொறுப்புடனும் அமைந்த பொருள் பொதிந்த உரை அது!**

"நம்முடைய அரசு, இப்படி சென்னையை உயர்த்த நாள்தோறும் புதிய புதிய திட்டங்களாக நிறைவேற்றுகிறது. ஆனால், கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் சென்னை எப்படி வெள்ளத்தில் முழ்கியது? சென்னை மட்டுமா? ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் நிதிநிலைமையும் மூழ்கடித்துவிட்டு சென்றார்கள். அவர்களைப் போன்று தான் 10 ஆண்டு கால பா.ஜ.க ஆட்சியும் சென்னைக்கு எதுவும் செய்யவில்லை. தமிழ்நாட்டிற்கும் ஒன்றும் செய்யவில்லை.

ஆனால், நாளைக்கு பிரதமர் மோடி கன்னியாகுமரி வரப்போகிறார். எதற்காக வரப் போகிறார்? தமிழ்நாட்டிற்கான சிறப்புத் திட்டங்களை உருவாக்கித் தர வரப் போகிறாரா? இல்லை, ஓட்டு கேட்டு வரப் போகிறார். ஓட்டு கேட்டு வருவதை நான் தவறு என்று சொல்ல விரும்பவில்லை.

**வெள்ளத்தில் மக்கள் மிதந்தபோது வராத பிரதமர் மோடி, இப்பொழுது அடிக்கடி வருவது ஏன்?**

சென்னை வெள்ளத்தில் மிதந்த போது, மக்களுக்கு ஆறுதல் கூற வராத பிரதமர், தூத்துக்குடியும், கன்னியாகுமரியும் வெள்ளத்தில் மிதந்த போது மக்களைப் பார்க்க வராத பிரதமர், ஓட்டு கேட்டு மட்டும் வருவது நியாயமாக இருக்கிறதா? குஜராத் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது, அன்றைய தினமே ஹெலிகாப்டரில் சென்று பார்த்தாரே! மறுநாளே, நிவாரண நிதி கொடுத்தாரே! குஜராத்திற்கு ஏன் கொடுத்தீர்கள் என்று நான் கேட்கவில்லை. தமிழ்நாட்டுக்கு ஏன் தரவில்லை என்றுதான் கேட்கிறேன். குஜராத்துக்கு அன்றைய தினமே நிதி தருவதும், தமிழ்நாட்டிற்கு மூன்று மாதம் சென்ற பிறகும் நிதி தர மனதில்லாமல் போவதும் ஏன்? இதைக் கேட்டால், நம்மை பிரிவினைவாதி என்று அடையாளம் காட்டுகிறார்கள். நம்மை பிரிவினைவாதி போல் பேசுகிறார்கள்.

அது மட்டுமா? சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டப் பணி! நாம் ஆட்சிக்கு வந்த உடனே, பிரதமரை நான் முதல் முறையாக பார்க்கச் சென்றபோது, மெட்ரோ பணிக்கு நிதி கேட்டேன். இப்போது, 3 ஆண்டுகள் ஆகின்றன, என்ன நிலைமை? நமக்கு அடுத்து கேட்ட மாநிலங்களுக்கு வழங்குகிறார்கள். ஆனால், நமக்கு ஒன்றும் வரவில்லை! தரவில்லை!

**தமிழ்நாடு கொடுக்கும் நிதிக்கேற்ப ஒன்றிய அரசு திருப்பிக் கொடுக்கிறதா?**

நாம் கேட்டுக் கொண்டே இருப்பது என்ன? ஒன்றிய அரசுக்கு அதிக வரி வருவாய் எங்கிருந்து போகிறது? நம்முடைய தமிழ்நாட்டில் இருந்து போகிறது. நம்முடைய பணம் தான் போகிறது. ஆனால், அதற்கேற்ற மாதிரி திருப்பி தருகிறார்களா? நாம் ஒரு ரூபாய் கொடுத்தால், 28 பைசா தான் மறுபடியும் நமக்கு வருகிறது! அதையாவது ஒழுங்காக கொடுக்கிறார்களா? இல்லை!

நிதி கேட்டு கடிதம் எழுதுகிறோம்! நம்முடைய எம்.பி.க்கள் எல்லாம், நிதி கொடுங்கள் என்று நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கிறார்கள். அதற்குப் பிறகு தான் அந்த 28 பைசாவையும் கொடுக்கிறார்கள். இதை சொன்னால் நாம் பிரிவினை பேசுகிறோமா!

**பிரிவினை பேசுவது – காட்டுவது யார்?**

பிரதமர் மோடி அவர்களே! பாரதப் பிரதமர் அவர்களே! பிரிவினை எண்ணம் எங்களுக்கு இல்லை. ஒரு கண்ணில் வெண்ணெய்யும், மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் ஏன் என்று தான் கேட்கிறோம். நான் அழுத்தம் திருத்தமாக சொல்வது, தேசபக்தியை பற்றி எங்களுக்கு யாரும் போதிக்க வேண்டியது அவசியம் இல்லை. நாட்டுப்பற்று பற்றி எங்களுக்கு யாரும் வகுப்பு எடுக்க வேண்டிய அவசியமே கிடையாது" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

அடுக்கடுக்கான ஆதாரப்பூர்வ நிகழ்வுகளை வரலாற்றிலிருந்து எடுத்து வரிசையாக நிற்க வைத்துள்ளார்.



**பண்பாடற்ற பிரதமரின் பேச்சு**

தமிழ்நாட்டிற்கு தங்களது 'அமிர்தகால' ஆட்சியின் பெருமைகளை அடுக்கிக் காட்டுவதை விடுத்து, "தி.மு.க.வை அழிப்பேன், ஒழிப்பேன்" என்று மோடி தான் வகிக்கும் பிரதமர் பதவியின் மாண்பையே மறந்துவிட்டுப் பேசுகிறார்!

''இந்தியாவின் 140 கோடி மக்களும் என் மக்கள் என் குடும்பம்'' என்று கூறும் அவரது உள்ளத்தில், அது உண்மையானதாக இருந்தால், தூத்துக்குடி, நெல்லை போன்ற மாவட்டங்களிலும், சென்னை, செங்கற்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் போன்ற மாவட்டங்களிலும் 146 ஆண்டுகள் காணாத வகையில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம், தமிழ்நாட்டு மக்களை பேரிடருக்கு ஆளாக்கிய போது வந்தீர்களா? கேட்ட நிதியைக் கொடுக்காவிட்டாலும், நீங்கள் அனுப்பிய வெள்ள நிவாரண ஒன்றிய ஆய்வுக் குழு அறிக்கைப்படியாவது ஏதாவது உதவி அளித்தீர்களா? மணிப்பூரை மறந்த கதை ஒருபுறம் இருக்கட்டும்.

தமிழ்நாட்டிற்கு வாக்குக் கேட்க வரும் பிரதமர், தமிழ்நாட்டு மக்களின் துயர் துடைப்பதற்கு நிதி தராததைவிடக் கொடுமை, பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்த்து ஓர் ஆறுதல் வார்த்தைக்கூட கூறாத நிலையில், அவர்களது துன்பம், துயரம் உங்களது கண்களுக்குத் தெரியவில்லை. அவர்களது ஆறாத் துயரம், அழுகுரல் உங்களது காதுகளுக்குக் கேட்கவில்லை அவர்களது கையில் உள்ள வாக்குச் சீட்டு மட்டுமே தெரிகிறது!

அதை முன்பு நிறைவேறாத 'கியாரண்டி'களைக் கூறியதுபோல இப்போது புதிய புதிய வாக்குறுதிகளை மயக்க பிஸ்கெட்டுகளைப் போல தந்து விடுவது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை அள்ளி விட்டுப் போவது ஆரோக்கிய அரசியலாகுமா? நிதிக் கருவூலத்தை நீங்கள் மூடினாலும், தனது சாதுரியத்தினால் தமிழ்நாட்டு மக்களது தேவைகளை முடிந்த அளவுக்குப் பூர்த்தி செய்து வருகிறார் தமிழ்நாட்டு முதலமைச்சர். எனவேதான், மக்களின் பேராதரவுடன் ஆட்சி புரிகிறார்!

இவரை பிரிவினைவாதி என்ற பூச்சாண்டி, வீண்பழி ஒருபோதும் அதிலும் குறிப்பாக இந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் பிரதமர் மோடி அவர்களால் தொடர்ந்து சொல்லப்பட்டாலும், அது ஒருபோதும் எடுபடாது.

**மக்களை ஜாதியால் பிரித்த பிரிவினைவாதிகள் யார்?**

'பிரிவினைவாதிகளாக' திராவிடர் இயக்கம் இருந்தால், சமூகநீதி, சகோதரத்துவ அடிப்படையில் திராவிட இந்தியாவாக ஆக்கிட, காஷ்மீர்முதல் கன்னியாகுமரி வரை உள்ள மக்களை கட்சிகளை இணைத்து ஏற்படுத்தப்பட்ட கூட்டணிக்கு ''இந்தியா கூட்டணி'' என்ற பெயர் சூட்டிட காரணமாக இருப்பார்களா?

வர்ணாசிரம ஜாதியாலும், மதத்தாலும் மக்களை வேற்றுமைப்படுத்திடும் பேதத்தை நியாயப்படுத்தும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பரிவாரத்தின் அரசியல் பிரிவான பா.ஜ.க. பிரதமர் மற்றவர்களை பிரிவினைவாதிகள் என்று கூறுவது அபத்தம்!

மனிதர்களை ஜாதியால் பிரித்தவர்கள் யார்?

மனித உடல்களின் அங்கங்களைக்கூடப் பிரித்து "வலங்கைஜாதி இடங்கை ஜாதி" என்று பிரித்தது எது, உங்கள் ஆரியம் அல்லவா?

திராவிடம் சமத்துவம் அல்லவா!

இப்படி எத்தனையோ கூற முடியும்!

வர்ணபேதம் ஒழிய வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். கூறுமா?

இந்தியா அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் உள்ள சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதி, மதச்சார்பின்மை போன்றவற்றை கொள்கைலட்சியங்களாகவே கொண்டு இயங்கும் இயக்கம் திராவிட இயக்கங்களாகும்.

ஆர்.எஸ்.எஸ். ஜாதி வர்ணம் ஒழியவேண்டும் என்றாவது கூறுமா?

"140 கோடி மக்களும் தன் குடும்பம் என்றால், இப்படி ஓட்டு வேட்டைக்கு ஓடோடி வருவதற்கு முன்னர், பேரிடரால் பாதிக்கப்பட்டபொழுது உதவிட வரவில்லையே அன்று!'' முதலமைச்சர் ஸ்டாலின் குரல்தான் இனி தமிழ்நாட்டு ஒட்டுமொத்த குடும்பங்களின் ஒருங்கிணைந்த ஒரே குரல்! எங்கும் ஒலிக்கட்டும்!!

மணிப்பூரை மறந்த பிரதமர், தமிழ்நாட்டைச் சுற்றி சுற்றி எத்தனை முறை வந்தாலும், பெரியார் மண் சமூகநீதி மண்ணான தமிழ்நாட்டில், ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. சரக்கு ஒருபோதும் விலை போகாது!

**முதலமைச்சரின் முத்தான கருத்துகள்**

காவியின் காலடியில் உள்ள "விபீடணக் கூட்டமும்'' விலாசம் இழக்கும் என்பதை தேர்தல் முடிவும் காட்டும்!

''பலரை சில காலம் ஏமாற்றலாம்

சிலரை பல காலம் ஏமாற்றலாம்

ஆனால், எல்லோரையும் எல்லா காலமும் ஏமாற்ற முடியாது'' என்ற பாடத்தை தமிழ்நாடு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவும் இத்தேர்தலில் பா.ஜ.க.வுக்குக் கற்றுக் கொடுக்கும் என்பது உறுதி!

முதலமைச்சரின் முத்தான கருத்துகள் தெருமுழக்கமாக பெரு முழக்கமாகி எங்கும் ஒலித்தால், நியாயம் விளங்கும் நீதி வெல்லும் என்பது உறுதி!

வரும் தலைமுறையை வாழ வைக்க வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் 'இந்தியா கூட்டணி' வெற்றியடையவதன் மூலமே சாத்தியம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஆகியோர் இராயபுரம் மண்டலம், வார்டு57க்குட்பட்ட யானைக்கவுனி பகுதியில் ரூ.71.26 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியில் முடிவுற்ற ஒருவழிப் பாதையினை நேற்று (15.03.2024) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி. எஸ். சமீரன், வட்டார துணை ஆணையாளர்கள் கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு) மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் ராஜேஷ் ஜெயின் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் போட்டியிடும்

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் அறிவிப்பு!

சென்னை,மார்ச்.16-

மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர்களை மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் நேற்று அறிவித்தார்.

அவரது அறிவிப்பில் மதுரை நாடாளுமன்றத் தொகுதியில் சு.வெங்கடேசன், திண்டுக்கல் தொகுதியில் சச்சிதானந்தமும் பேட்டியிடுகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.



சு.வெங்கடேசன்
மதுரை தொகுதி



சச்சிதானந்தம்
திண்டுக்கல் தொகுதி

சென்னை தியாகராயர் நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் வேட்பாளர்கள் தேர்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப் பிறகு மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் திண்டுக்கல், மதுரை வேட்பாளர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியால் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துடன் மதுரை மக்களவை தொகுதியில் தற்போதைய எம்.பி. சு.வெங்கடேசன் பேட்டியிடுவார் என்றும், திண்டுக்கல் மக்களவை தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக சச்சிதானந்தம் போட்டியிடுவர் என்று அறிவித்தார்.

35 ஆண்டுகாலம் மார்க்சிஸ்ட் கட்சியில் முழுநேர ஊழியராக பணியாற்றி வருபவர் சச்சிதானந்தம். ஜனநாயக வாலிபர் சங்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகியாக செயல்பட்டவர் சச்சிதானந்தம். மதுரை தொகுதியில் மீண்டும் சு.வெங்கடேசன் எம்.பி. போட்டியிடுகின்றனர். மதுரை, திண்டுக்கல்லில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் பணிகள் உடனடியாக தொடங்கும் என கே.பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! ஜி.எம்.தேவன் தலைமை!

# துறைமுகத்தில் மனிதநேயத் திருவிழா - கவியரங்கம்!

### ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைக்கிறார்! பேராசிரியர் அப்துல்காதர் - கவிஞர்கள் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 16

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா - சூரியச்சுடர் - 70வது நிகழ்ச்சியாக புதிய புறநானூறு! திராவிட வரலாறு! என்ற தலைப்பில் இன்று (16.3.2024- சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, முத்தையாப் பேட்டை மேல்நிலைப் பள்ளி அருகில் கவியரங்கம் நடைபெறுகின்றது.

விழா நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் ஜி.எம்.தேவன் தலைமை வகிக்கிறார்.


சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., துறைமுகம் பகுதிச் செயலாளர் எஸ். இராஜசேகர், எஸ்.முரளி மற்றும் எம்.விஜயகுமார், ப.ஸ்ரீராமுலு, இசட் ஆசாத், என்.எம். பி. சேக் அப்துல்லா, இப்ராகிம் கனி, ஆர்.கலைச்செல்வி, பா. ஜெகதீஷ், பி.விஜயகுமார், எம். வினாயகம், பா.பிரதீப்குமார், எல்.சம்பத் குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கவியரங்கத்தை கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி துவக்கி வைக்கிறார். கவியரங்கத்திற்கு பேராசிரியர் அப்துல் காதர் தலைமை வகிக்கிறார்.

இதில் கவிஞர் கபிலன், கவிஞர் விவேகா, கவிஞர் நெல்லை ஜெயந்தா,கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி, கவிஞர் தனிக்கொடி, கவிஞர் தமிழ் மணவாளன் ஆகியோர் கவிபாடுகின்றனர்.

இதில் மேயர் பிரியா, க.பிரபு உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணியினர், தோழர்கள், பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

60 (அ) வட்டச் செயலாளர் ஆ.நா.பார்த்திபன், 60வது வட்டச் செயலாளர் க.கவியரசு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.







கிருஷ்ணகிரியில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில் கழக வர்த்தக அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் சிறப்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் தே.மதியழகன், எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர். இக் கூட்டத்தில் ஏளாளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மோடியா - இந்த லேடியா எனக் கேட்டு பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்தது என் வாழ்நாள் தவறு என்றவர்!

# உச்சநீதிமன்றத்தால் ஊழலில் தண்டிக்கப்பட்ட ஜெயலலிதா நல்லாட்சி நடத்தினாரா?

### பிரதமர் மோடியின் பேச்சைக் கண்டித்து கிருஷ்ணகிரியில் - கவிஞர் காசிமுத்துமாணிக்கம் பேச்சு!

கிருஷ்ணகிரி, மார்ச் 16-

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற முதல்வர் ஸ்டாலின் பிறந்த நாள் கூட்டம் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் நவாப் முன்னிலை வகிக்க. தி.மு.க. வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில்,

பிரதமர், சென்னையில்' "எம். ஜி. ஆரும், ஜெயலலிதாவும்தான் சிறப்பான ஆட்சி தந்தார்கள்" என்று பேசியுள்ளார். அவரிடம் எனக்கு சில சந்தேகங்கள். மோடி பதில் சொல்ல வேண்டும்.

**சந்தேகத்திற்கு பதில்தேவை ஜீ!**

"சிறுபான்மையினரை கொடுமைபடுத்திய பா.ஜ.கவுடன் நான் கூட்டணி வைத்ததுதான் என் வாழ் நாளில் நான் செய்த பெரும் தவறு என்றாரே ஜெயலலிதா" அது சரிதானா?

"இனி என் வாழ்நாளில் பா.ஜ.கவுடன் எந்தச் சூழலிலும் சேரமாட்டேன்" என்றாரே? நினைவு இருக்கிறதா. அதுவும் சிறந்த ஆட்சியின் அங்கமா?

"மோடியா இந்த லேடியா" என்றால் என்ன அர்த்தம். "அந்தக் கெட்டவனா இந்த நல்லவளா" என்பதுதானே கோஷம், ஜெயலலிதாவின் சிறந்த ஆட்சியில் மோடி கெட்டவன் என்பது ஜெ கூற்றுப்படி அடக்கமா?

எங்கே சொல்லுங்கள் பார்ப்போம். ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது பொய் வழக்கில் காஞ்சி சங்கராச்சாரியாரை ஆந்திராவில் தீபாவளி பூஜை ஒன்றில் இருந்தவரை ஹெலிகாப்டரில் சென்று தூக்கி வரச்செய்து சிறையில் அடைத்து, கோவிலுக்குச் சொந்தமான மருத்துவமனை தனக்கு தர வேண்டும் என மிரட்டி னாரே அதுதான் நேர்மையான சிறந்த ஆட்சியா? அப்போது வேண்டாம், இப்போது கூறுங்கள், அவ்வளவு விரைவாக கைது செய்தது சரியா? இப்போதுதான் கூட்டணி இல்லையே தைரியமாய் சொல்லுங்கள்.

மூப்பனாரை சுண்டைக்காய் என்றும், திருச்சி பொதுக்கூட்டத்தில் கலகம் செய்தார் என்றும் கூறியது சரிதானா என தங்கள் பக்கத்தில் இருக்கும் ஜி.கே. வாசனை கேட்டு சொல்லுங்களேன் இதுதான் சிறந்த ஆட்சியின் லட்சணமா?

**அமைதிப் படை சத்தியராஜ்!**

அத்வானியை செலக்டீவ் அம்னீஷியா என்றாரே அது கூட சிறந்த ஆட்சியில் வரும் எனில் அத்வானி அப்படித்தான் என நீங்கள் கூறுவது போலாகும். பரவாயில்லையா? ஓட்டு வந்தால் சரி அத்வானி அசிங்கப்பட்டால் நமக்கென்ன? நாம்தான் அமைதிப்படை சத்தியராஜ் ஆயிற்றே.

உச்சநீதி மன்றத்தால் ரூ.100 கோடி அபராதம். உயிர் இருந்தால் 2ம் குற்றவாளியான சசிகலா போல் 4 ஆண்டு சிறைதண்டனை என இறுதி தீர்ப்பு பெற்ற ஜெயலலிதாவின் நிர்வாகம்தான் சிறந்தது என்றால் இந்தியாவில் உள்ள மற்ற பா.ஜ.க. முதல்வர்களும் ஜெயலலிதாபோல் சிறைக்கு போகச்சொல்கிறீர்கள் அப்படித்தானே! மற்றவர் மனம் புண்படு வதை பொருட்படுத்தாது. தன்னை அன்னை தெரசாவாக, பராசக்தியாக போஸ்டர், கட்அவுட், ப்ளக்ஸ் போர்டு என மாற்றிக்கொண்டதுதான் சிறந்த ஆட்சியா?

வழக்காடு மன்றத்தில் ஜெயலலிதா குற்றவாளி என கூறியதற்காக தர்மபுரியில் மூன்று கல்லூரி மாணவிகளை பேருந்தோடு சேர்த்து எரித்ததுதான் சிறந்த ஆட்சியா?

உங்கள் கட்சி சுப்பிர மணியசுவாமி வழக்காடு மன்றம் போனபோது கற்பின் அடையாளத்தை தூக்கி காட்டி தனது மகளிரை போராட்டம் செய்ய சொன்னதுதான் சிறந்த ஆட்சியா?

தனது சொந்த கட்சிக்காரர்களான சட்டமன்ற உறுப்பினர்கள் இராணிப்பேட்டை மோகன், உப்பிலியாபுரம் ரவிச்சந்திரன், மதுராந்தகம் சொக்கலிங்கம், தூத்துக்குடி ரமேஷ் போன்றவர்கள் அடித்து துவைத்து. மருத்துவமனைகளில் வாரக்கணக்கில் தொங்கவிட்டதுதான் சிறந்த ஆட்சியா?

ஊட்டியில் செல்லமாக தன்னை தட்டிவிட்டது என்பதற்காக அப்பு யானை அடுத்துமுறை நான் இங்கே வரும் போது அந்த குட்டியானை அப்பு உயிருடன் இருக்கக்கூடாது எனகூறி மேலூருக்கு அனுப்பிவைப்பதுதான் சிறந்த ஆட்சியா?

**ஸ்டிக்கர் அ.தி.மு.க. ஆட்சி!**

உங்கள் கட்சி மாநில துணைத்தலைவர் சசிகலா புஷ்பா "பாராளுமன்றத்தில் ஜெயலலிதாவும் - சசிகலாவும் என்னை அடித்து துவைத்தார்கள். முகத்தில் காரித்துப்பினார்கள். தங்களது செருப்பால் என் முகத்தில் அடித்து, ரத்தகாயமே வந்ததாக" சாட்சியங்களுடன் அழுதாரே அதுதான் சிறந்த நிர்வாகமா ஜி?

சமச்சீர் கொள்கை கொண்ட தமிழக அரசின் பாடப்புத்தகத்தின் பின் பக்க அட்டைப்படத்தில் வள்ளுவன் படம் இருந்தற்காக ரூ.1000 கோடி பாழானாலும் பரவாயில்லை என கிழித்துப்போட்ட ஜெயலலிதா நிர்வாகம் சிறந்ததா ஜி. ஓராண்டு மட்டுமே ஆட்சிக்கு பாக்கி நாட்கள் இருக்கும் போது மூன்று ஆண்டுக்கு புத்தகப்பை ஆர்டர் போட்டு வைத்து அதில் "ஜெ " படம் எடப்பாடி படம் இருந்தாலும் அதை அப்புறப்படுத்தினால் ஆண்டுக்கு ரூ.18 கோடி நஷ்டம் என்பதால் அப்படியே இருக்கட்டும். அந்த காசுக்கு கொரோனாவில் மாத்திரை மருந்து வாங்குவோம் எனச் சொன்ன முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சியை விட ஜெயலலிதா ஆட்சி சிறந்ததா மோடி ஜி.

**பிரதமர் மோடிக்கு மணிப்பூரும், ஜெயலலிதாவும் ஒன்றுதான்!**

ரூ.1000 கோடி போனாலும் பரவாயில்லை. "கலைஞர் தந்தார்" என்பதற்காக புதியதலைமைச் செயலகத்தை மருத்துவமனையாக மாற்றினாரே ஜெயலலிதா அதுதான் சிறந்த ஆட்சியா மோடி ஜீ.

அமெரிக்க கிளிண்டன் கிளாரி பாராட்டிய அண்ணா நூற்றாண்டு நூலகத்தை திருமண மண்டபமாக்க ஜெயலலிதா முயன்றாரே!

இவ்வளவு பேசிய தாங்கள் "யானையும் கூட கால் ஆடும் சேற்று நிலத்தில் அகப்படும் போது நரிகள் கொன்றுவிடும் " என்று எடப்பாடி நியமித்த நீதிபதி ஆறுமுகசாமி கமிஷன் சொன்னதே அடுத்த முறையாவது இங்கு வரும்போது சொல்லுங்கள். ஜெயலலிதாவின் மரணம் எப்படி நிகழ்ந்தது என்று.

இது எல்லாம் சரி. ஆனால் சிறந்த ஆட்சி ஜெயலலிதா தந்ததாக கூறும் தாங்கள், ஜெயலலிதா 75 நாள் அப்பல்லோவில் இருந்தபோது ஒரு நாள் கூட எட்டிப் பார்க்காதது ஏன் ஜீ! மணிப்பூர் மாதிரி ஜெயலலிதாவையும் அன்று மறந்தது ஏன் ஜி?

இவ்வாறு கவிஞர் காசி முத்து மாணிக்கம் கேள்விகளால் துளைத்துள்ளார்.

### ரூ.69.57 கோடியில் கண்ணகிநகர் பகுதி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட

# மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் குழாய்கள் மாற்றியமைக்கும் பணி!

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, மார்ச் 16-

ரூ.69.57 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு196, கண்ணகி நகர் பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் பிரதான குழாய்கள் மாற்றி அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது என

சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.69.57 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு196, கண்ணகி நகர் பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் பிரதான குழாய்கள் மாற்றி அமைக்கும் பணிகள் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், கண்ணகி நகர் பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு 18.54 கி.மீ நீளத்திற்கு 100 மி.மீ முதல் 400 மி.மீ விட்டமுடைய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் 0.7 கி.மீ நீளத்திற்கு 400 மி.மீ விட்டமுடைய பிரதான குழாய் பதிக்கும் பணிகள் உடனடியாக தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், 38 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 15,656 ண்ணிக்கையிலான 300 லிட்டர் கொள்ளளவு கொண்ட உயர் அடர்த்தி பாலிஎத்திலீன் (HDPE) தொட்டிகள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 6 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் இத்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, கண்ணகி நகர் பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் 1 இலட்சம் பொதுமக்கள் பயன் பெறுவர்.

இவ்வாறு குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம், தம்புரெட்டிபாளையத்தில் இருந்து நத்தம் வழியாக மூலரோடு செல்லும் சாலை திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம், தம்புரெட்டிபாளையத்தில் இருந்து நத்தம் வழியாக மூலரோடு செல்லும் சாலை நெடுஞ்சாலை கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3.2கிலோ மீட்டர் 375 லட்சத்தில் சாலை அமைக்கும் பணியை மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் துவக்கி வைத்தார். உடன் கே. வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், எஸ்.ராமஜெயம், மு.பாஸ்கரன், இரா. அறிவழகன், எம்.கேசவன், கவுன்சிலர்கள் வெ.ஹரிதாஸ், மெய்யழகன், ஜெயசந்திரன், வேதாச்சலம், ஆர்.எஸ்.காளத்தி, ராஜா, பி.அறிவழகன், நத்தம் ஜெயராமன், பாலு, சித்திக், பழனி, முரளி, கௌரிசங்கர், வீரன், நரேந்திரன், தொழிலதிபர் கே.வி.நாகராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.03.2024) சென்னை தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இஃப்தார் புனித ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைவர் எம்.அப்துல் ரஹ்மான், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தரேஸ் அகமது மற்றும் வக்ஃப் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைகிணங்க திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காணொளி காட்சி வாயாக திறந்து வைத்ததை தொடர்ந்துமுன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சாமு.நாசர் மருத்துவமனை கட்டிடத்தை தொடங்கி வைத்து மருத்துவமனையை பார்வையிட்டார். உடன் மாநகர மேயர் ஜி.உதயகுமார், மாநகராட்சி ஆணையர் ஷேக் அப்துல் ரகுமான் மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மண்டல தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபி சேகர், ஜோதி லக்ஷ்மி நாராயண பிரசாத், அம்முவிஜயன், மாவட்ட பொருளாளர் ப.நரேஷ்குமார், பகுதி செயலாளர்கள் பொன் விஜயன், நாராயண பிரசாத், மருத்துவ துறை அதிகாரிகள் உள்ளனர்.

ஆசிய வளர்ச்சி வங்கியின் மானிய நிதியில்

# ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மார்ச் 16

பருவ மழை காலங்களில் பெரு வெள்ள பாதிப்பை கட்டுப்படுத்தவும், மழை நீர் கடலில் சென்றடைவதை தடுத்து நீர்நிலைகளில் சேமிப்பதற்காகவும், பெருநகர சென்னை மாநகராட்சி பல்வேறு நீர் நிலைகளை சீரமைத்து காக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணியின் ஒரு பகுதியாக ஆசிய வளர்ச்சி வங்கி, Global Environmental Facility மானிய நிதியில் கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு பணிக்கு ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.

கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு பணியில், ஏரியினை தூர்வாரி, ஆழப்படுத்தி, அகலபடுத்தி, ஏரியின் கரையை உயர்த்தி அமைத்து ஏரியின் கொள்ளளவு மூன்று மடங்காக அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த புனரமைப்பு பணியில் மதகுகளை சீரமைத்தல், பல்லுயிர் வாழ் விடங்களை மேம்படுத்துதல் பொது மக்கள் பயன்பாட்டிற்காக, ஏரியின் கரையில் பசுமை தோட்டம் மற்றும் நடைபாதை அமைத்தல், ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு பணியினால் ஏரியினை சுற்றியுள்ள பகுதிகளில் மழை நீர் தேங்குவது தவிர்க்கப்படும். மேலும் கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு பணியினால் அருகில் உள்ள விவசாய நிலங்களுக்கு சீரான பாசன வசதி செய்து தரப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

வெள்ளகோவில் ஒன்றியத்தில் ரூ.16.71 கோடியில் சாலைகள் தரம் உயர்த்தும் பணிகள் -

# 969 பயனாளிகளுக்கு ரூ.10.50 இலட்சத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

*திருப்பூர், மார்ச் 16-*

*திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.16.71 கோடி மதிப்பீட்டில் சாலைகள் தரம் உயர்த்தும் பணிகளை துவக்கி வைத்து, கலைஞர் மக்கள் சேவை முகாமில் தேர்வு செய்யப்பட்ட 969 பயனாளிகளுக்கு ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் வழங்கினார்.*

*திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் திரு. இல.பத்மநாபன் முன்னிலையில் 09.03.2024 சனிக்கிழமை அன்று நல்லூர்பாளையம் விநாயகர் பேக்கரி அருகில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.2.12 கோடி மதிப்பீட்டில் காங்கேயம் கொடுமுடி சாலை கல்லாங்காடு வரையிலும்,*

*ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் வள்ளியரச்சல் வீரசோழபுரம் முதல் நல்லூர்பாளையம் வழியாக வேப்பம்பாளையம் வரையிலும், ரூ.2.82 கோடி மதிப்பீட்டில் வள்ளியரச்சல் வீரசோழபுரம் காங்கேயம் கொடுமுடி சாலை வழியாகவும் சாலைகள் தரம் உயர்த்தும் பணி,*

*வேலம்பாளையத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் இந்திராநகர் முதல் பூலக்காடு வரையிலும், ரூ.1.64 கோடி மதிப்பீட்டில் காங்கேயம் முத்தூர் சாலை முதல் ஊடையம் சாலை வரையிலும் சாலை தரம் உயர்த்தும் பணி, முத்தூர் வெள்ளகோவில் ரோடு கல்லுக்கடையில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் ஒத்தக்கடை - வேலப்பநாயக்கன்வலசு சாலை முதல் நரிப்பள்ளம் வரையிலும், ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் பொன்பரப்பி - கம்பளியம்பட்டி சாலையில் பகவதிபாளையம் முதல் வட்டமலைக்கரை ஓடை வழியாக கம்பளியம்பட்டி வரையிலும்,*

*ரூ.2.61 கோடி மதிப்பீட்டில் கம்பளியம்பட்டி - காங்கேயம் பாளையம் சாலை முதல் ஓலப்பாளையம் சாலை வரையிலும், ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் முத்தூர் மூலனூர் சாலை முதல் கருப்பணவலசு வரையிலும் என மொத்தம் ரூ.16.71 கோடி மதிப்பீட்டில் சாலைகள் தரம் உயர்த்தும் பணிகளை துவக்கி வைத்து, வெள்ளகோவில் முத்தூர் ரோடு சுபஸ்ரீ மஹாலில் கலைஞர் மக்கள் சேவை முகாமில் தேர்வு செய்யப்பட்ட 969 பயனாளிகளுக்கு ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு. பெ.சாமிநாதன் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைதுறை உதவிக்கோட்டப் பொறியாளர் இளம்பூரணம், மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், வெள்ளகோவில் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சந்திரசேகர், நகர கழக செயலாளர்கள் சபரி எஸ்.முருகானந்தம், பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு,ஒன்றிய அவைத்தலைவர் தெண்டபாணி, மாவட்ட பிரதிநிதிகள் சிவக்குமார், வெள்ளிங்கிரி, ஒன்றிய இளைஞர் அமைப்பாளர் ஆதவன் ஜெகதீஷ்,*

*ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அழகரசன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சேடங்குட்டை பழனிசாமி, கவிதா, தங்கவேல், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சோமசுந்தரம், லோகநாதன், இந்திராணி சிவசாமி, பிஏபி பாசனசபை பகிர்மானக்குழு தலைவர் பெரியார் பாலு,*

*பிஏபி பாசனசபை தலைவர்கள் தங்கமுத்து, சக்திவடிவேல், செந்தில்வேல், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பிரசாத் முத்துக்குமார், செல்வராஜ் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை, கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

திரு.வி.க. நகர் - தண்டையார்பேட்டை - மணலி மண்டலங்களில்

# குடிநீர் குழாய்கள் - நீர்த்தேக்கத் தொட்டி- கழிவுநீர் குழாய்கள் அமைக்கும் பணி!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

*சென்னை, மார்ச் 16-*

*ரூ.51.16 கோடி மதிப்பீட்டில் திரு.வி.க நகர் மண்டலம், கொளத்தூர் பகுதியில்*

*வார்டு64, சிவானந்தா நகர், வார்டு65 & 68, பெரியார் நகரில் கழிவுநீரிறைக்கும் நிலையம் மற்றும் கழிவுநீர் கட்டமைப்பு குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள் ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு47, கொருக்குப்பேட்டையில் உள்ள பாரதி நகர் பகுதியில் நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் விடுபட்ட தெருக்களில் குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள்*

*ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் மணலி மண்டலம், வார்டு15, மணலி புதுநகர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.51.16 கோடி மதிப்பீட்டில் திரு.வி.க நகர் மண்டலம், கொளத்தூர் தொகுதியில் வார்டு64, சிவானந்தா நகர், வார்டு65 & 68, பெரியார் நகரில் கழிவுநீரிறைக்கும் நிலையம் மற்றும் கழிவுநீர் கட்டமைப்பு குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு47, கொருக்குப் பேட்டையில் உள்ள பாரதி நகர் பகுதியில் நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் விடுபட்ட தெருக்களில் குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் மணலி மண்டலம், வார்டு15, மணலி புதுநகர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கி வைக்கப் பட்டது.*

*அதனடிப்படையில், கொளத்தூர் பகுதியில் உள்ள சிவானந்தா நகர் பகுதிகளில் 2.5 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் பெரியார் நகரில் 16.5 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ விட்டமுடைய DWC குழாய், 0.31 கி.மீ நீளத்திற்கு 300 மி.மீ விட்டமுடைய DWC குழாய், 0.61 கி.மீ நீளத்திற்கு 400 மி.மீ விட்டமுடைய CI குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. சிவானந்தா நகர் பகுதியில் 98 எண்ணிக்கையிலான புதிய இயந்திர நுழைவாயில்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம், 650 குடியிருப்புகளில் உள்ள 5,000 பொதுமக்கள் பயனடைவர். மேலும், பெரியார் நகரில் 130 தெருக்களில், 636 எண்ணிக்கையிலான புதிய இயந்திர நுழைவாயில்கள் அமைக்கப்பட்டு 14,320 குடியிருப்புகளில் உள்ள 57 ஆயிரத்து 281 பொது மக்கள் பயனடைவர்.*

*தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு47, கொருக்குப்பேட்டையில் உள்ள பாரதி நகர் பகுதியில் 2.4 கி.மீ நீளத்திற்கு 150, 200, 300, 450 மி.மீ விட்டமுடைய குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் 600 மி.மீ விட்டமுடைய குடிநீர் பரிமாற்ற குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 3 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 10 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படும். நாளொன்றுக்கு 13 மில்லியன் லிட்டர் குடிநீர் மேற்கண்ட பகுதிகளுக்கு வழங்கப்படுவதன் மூலம் 1 இலட்சத்து 28 ஆயிரத்து 256 பொதுமக்கள் பயனடைவர்.*

*மணலி மண்டலம், வார்டு 15, மணலி புதுநகர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு 1.5 கி.மீ நீளத்திற்கு 100 மி.மீ விட்டமுடைய அர்ப்பணிக்கப்பட்ட குடிநீர் குழாயினை 600 மி.மீவிட்டமுடைய குடிநீர் பிரதான குழாயுடன் இணைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், 6,930 பொதுமக்கள் பயனடைவர்.*

*இவ்வாறு சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.*



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (15.3.2024) இந்து சமயம் அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் காசிமேடு கடற்கரையை ரூ.5.41 கோடி மதிப்பீட்டில் புதிய நடைபாதை அமைத்தல் மற்றும் கடற்கரையை மேம்படுத்துவதற்கான பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் , ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாநகராட்சி நகரமைப்பு குழுத் தலைவர் இளைய அருணா, மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி.யூ.கணேசன், சி எம் டி ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் பாலசுப்பிரமணியன், கண்காணிப்பு பொறியாளர் (பொ) பாலமுருகன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.தேவி, திருமதி.குமாரி மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# ரூ.147 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு உயர் சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டிடம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

*சென்னை, மார்ச் 16-*

*முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை, ஸ்டான்லி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.147 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு உயர்சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டிடம் மற்றும் விடுதியுடன் கூடிய செவிலியர் பயிற்சி பள்ளி கட்டிடம் அமைக்கப்படும் என்றும் சென்னை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மரபுசார் பிற அரியவகை நோய்களுக்கான மருத்துவத்துறையை ஒப்புயர்வு மையங்களாக உயர்த்தப்படும் என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:*

*சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.147 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு உயர்சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டிடம் மற்றும் விடுதியுடன் கூடிய செவிலியர் பயிற்சி பள்ளிக் கட்டடம் அமைத்தல் தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டம் (உலக வங்கியின் நிதி உதவியுடன்) அடித்தட்டு மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த இயங்கி வருகிறது.*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரால் 2023-24 ஆம் ஆண்டு மாநில நிதி அறிக்கையில் (அறிவிப்பு எண் 23 இல்) ஸ்டான்லி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பல்நோக்கு உயர்சிறப்ஹப சிகிச்சை பிரிவு கட்டிடம் மற்றும் விடுதியுடன் கூடிய செவிலியர் பயிற்சி பளி கட்டடம் ரூ.147 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.*

*அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை இந்தியாவின் பழமையான அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றாகும். 1938 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த மருத்துவமனை சென்னையில் ஒரு மையப் பகுதியில் அமைந்துள்ளது. வடசென்னையில் அமைந்துள்ள எண்ணற்ற சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் பணிபுரிய தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலங்களில் இருந்தும் தொழிலாளர்கள் இங்கு வருகின்றனர். மேலும் நகரின் இந்த பகுதி சாலை போக்குவரத்து விபத்துக்கள், தாக்குதல்கள் மற்றும் தொழில்துறை விபத்துகளுக்கான மையமாகவும் உள்ளது. இது மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையிலும், மருத்துவக் கல்வித்துறையிலும் சிறந்து விளங்குகிறது.*

*பல்வேறு நோய்களுக்காக அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அவசரகால நோயாளிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அவசரகால மருத்துவத்துறையில் மட்டும், சராசரியாக மாதாந்திரம் 6000 முதல் 7000 நோயாளிகள் அவசர சிகிச்சை தேவைகளுக்காக வருகை தருகின்றனர். அவர்களில் கிட்டத்தட்ட 40% பேர் மோசமான நிலையில் கொண்டு வரப்படுகின்றனர். பல நோயாளிகள் மற்ற வார்டுகளுக்குச் செல்வதற்கு முன் CCU (Critical Care Unit) பிரிவில் 48 மணி நேரத்திற்கும் மேலாக தங்க வேண்டியிருக்கும் என்பதால், அவசர சிகிச்சைப் பிரிவில் எந்த நேரத்திலும் படுக்கை முழு ஆக்கிரமிப்பு நிலையில் உள்ளது. இதை யொட்டி உள்வரும் மோசமான நோயாளிகள் மற்றும் பிற மருத்துவமனைகளில் இருந்து பரிந்துரைக்கப்படும் நோயாளிகள் காத்திருக்கும் நேரத்தை அதிகரிக்கிறது.*

*அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் அவசர அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதுடன் அறுவை சிகிச்சைக்குப் பிறகு தீவிர சிகிச்சை தேவைப்படுகிறது. எனவே போதுமான நோயாளி படுக்கைகள், அவசர ஆய்வக சேவைகள் மற்றும் கதிரியக்க இமேஜிங் வசதிகளுடன் கூடிய முக்கியமான பராமரிப்பு அமைப்பு தேவைப்படுகிறது.*

*நோயாளிகளுக்கு செவிலியர் சேவையை மேம்படுத்துவதற்காக, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆண்டுக்கு 100 செவிலியர் மாணவர்கள் சேர்க்கப்படும் நர்சிங் பள்ளி இயங்கி வருகிறது. தற்போதுள்ள நர்சிங் பள்ளி விடுதி கட்டிடம் 1965ஆம் ஆண்டு கட்டப்பட்டது மற்றும் முற்றிலும் சேதமடைந்த நிலையில் உள்ளது. மேலும், இந்த பாழடைந்த கட்டிடங்கள் ஆக்கிரமிப்பிற்கு பாதுகாப்பற்றவை என பொதுப்பணித்துறை (PWD) அறிவித்துள்ளது.*

*எனவே இக்கட்டிடத்தை தகர்த்து ரூ.112 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு உயர்சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டிடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தற்போது ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகள் நல காப்பகத்திற்கு பின்புறம் உள்ள பழைய சிறைச்சாலை வளாகத்தில் உள்ள காலி நிலத்தில் (ரூ.22 கோடி மதிப்பிலான) செவிலியர் மாணவர்கள் தங்குவதற்கு விடுதி வசதியும் (ரூ.13 கோடி மதிப்பிலான) புதிய நர்சிங் பள்ளியும் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*சென்னை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மரபுசார் பிற அரிய வகை நோய்களுக்கான மருத்துவத்துறையை ஒப்புயர்வு மையங்களாக உயரத்துதல்*

*தமிழ்நாடு குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்து நிலையான வளர்ச்சி இலக்கை அடைவதில் தேசிய அளவில் முன்னனி மாநிலமாக திகழ்கின்றது. 2020 ஆம் ஆண்டு மாதிரி பதிவு முறையின் படி தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு விகிதம் 1 ஆயிரம் பிறப்புகளுக்கு 13 ஆக தற்பொழுது குறைக்கப்பட்டது என்று மாதிரி பதிவு அறிக்கை தெரிவிக்கின்றது.*

*குழந்தை பராமரிப்பு மற்றும் திறன்மிகு சேவைகளை வழங்குவதற்காக, ஒருங்கிணைந்த பராமரிப்பு சேவை, தேவையான மனிதவளம், உபகரணங்கள், கட்டிடங்கள் மற்றும் பயிற்சிகளை அளித்து தற்போது 129 ஒருங்கினைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள், 83 சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்பு பிரிவுகள் 143 பச்சிளம் குழந்தை நிலைப்படுத்துதல் பிரிவுகள், 8 ஊட்டச்சத்து மறுவாழ்வு மையங்கள் 39 மாவட்ட மருத்துவமனையில் உள்ள ஆரம்ப நிலை இடையீட்டு மையங்கள், 20 ஒருங்கிணைந்த பாலூட்டுதல் மேலாண்மை மையங்கள் 20 பாலூட்டுதல் மேலாண்மை பிரிவுகள், அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 805 சிறார் நலத் திட்டக் குழுக்கள் மற்றும் 2286 ஆரம்ப சுகாதார மையங்களில் பச்சிளம் குழந்தை பராமரிப்பு பிரிவு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது.*

*மாநிலத்தில், குழந்தை இறப்பு விகிதத்தை மேலும் குறைப்பதற்காக, 2022 23 ஆம் ஆண்டில் சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளை மரபியல் சார்ந்த நோய்கள் மற்றும் மரபுசார் பிற அரியவகை நோய்களுக்கான 'ஒப்புயர்வு மையங்களாக' உயர்த்திட முதற்கட்டமாக ரூ.8.91 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.*

*மேற்காணும் மருத்துவமனையில் உள்ள மரபணு ஆய்வகத்தை தரம் உயர்த்துவதன் மூலம் நோயாளிகளுக்கு மரபணு நோய் மற்றும் மரபுசார் அரிய வகை நோய்களுக்கான பரிசோதனைகள், மற்றும் புற்று நோய்களுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், மரபியல் நோய் மற்றும் மரபுசார் அரிய வகை நோய்களை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம், சரியான நேரத்தில் சரியான சிகிச்சையை மேற்கொள்ள முடியும்.*

*மரபியல் சார்ந்த நோய்கள் மற்றும் மரபுசார் பிற அரியவகை நோய்கள் உடையோரை கண்டறிந்து, அவர்களது வாழ்க்கைத் திறனையும் செயல்திறனையும் வலுப்படுத்தும் விதமாக இந்த உயர்நிலை மரபியல் மூலம் கூறுகளின் அடிப்படையிலான மரபியல்சார் ஆய்வகங்கள் (Molecular Genetic Lab) செயல்படும். பச்சிளம் குழந்தைகள் தொடங்கி பல்வேறு நோய்களான தலசிமியா, சிக்கல் செல் அனிமியா, ஹீமோபிலியா, தைராய்டு மற்றும் அட்ரினல் சுரப்பிகளின் பிறவி குறைபாடுகள் (CH&CAH), டுசென் தசைசிதைவு (DMD), தண்டுவட தசைசிதைவு மற்றும் பிற குரோமோசோம் சார்ந்த மரபியல் நோய்களை கண்டறிவதற்கு மிகச் சிறந்த மையங்களாக செயல்படும். மரபியல் மற்றும் அமைப்பு வசதிகள் தற்போது சமுதாயத்தில் இல்லாதவொரு சூழ்நிலையில் சென்னை, எழும்பூர், குழந்தைகள் நல மருத்துவமனை, மதுரை இராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை ஆகிய மூன்று இடங்களில் அமைக்கப்படவிருக்கும் இவ்வொப்புயர்வு மையங்கள் தமிழ்நாட்டில் மண்டல அளவில் பயனாளிகளுக்கு பெரும்பயன் அளிக்கும் வகையில் முதற்கட்டமாக ரூபாய் 8.19 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.*

*இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.*



பூண்டி மேற்கு ஒன்றியம் பட்டரைபெரும்புதூர் ஊராட்சியில் நாராயணபுரம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளிக்கு குழந்தைகள் நேய பள்ளி உள் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளுக்கு இணையாக குளிர்சாதன வசதியுடன் கூடிய வகுப்பறை கட்டடங்களை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. இராஜேந்திரன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் செந்தில்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் மகாலட்சுமி மோதிலால், ஒன்றிய குழு உறுப்பினர் சுபாஷினி பாஸ்கரன், வட்டார கல்வி அலுவலர் பூவராகவ மூர்த்தி, தலைமையாசிரியர் ரேணுகா பரமேஸ்வரி, ஒன்றிய கழக நிர்வாகிகள் பட்டரை கே. பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா.மோதிலால், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, காஞ்சிப்பாடி பி.சரவணன், கிளை கழக செயலாளர்கள் சுப்பிரமணி, லோகநாதன், இன்பா, குணசேகரன், தேசய்யா, கஜேந்திரன், டில்லி, வரதன், பொற்கொடி ஊராட்சி மன்ற துணைத் தலைவர், வார்டு உறுப்பினர்கள், இருபால் ஆசிரியர் பெருமக்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் வல்லரசு பார்வர்டு பிளாக் தலைவர் பி.என்.அம்மாசி சந்தித்து 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். அதுபோது அக்கட்சியின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

பாசிச பா.ஜ.க. ஆட்சியிடமிருந்து

# இந்தியாவின் பரந்துபட்ட பன்முக ஆன்மாவை மீட்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மார்ச் 16-**

**பாசிச பா.ஜ.க. ஆட்சியிடமிருந்து இந்தியாவின் பரந்துபட்ட ஆன்மாவை மீட்க ஒன்றிணைய உறுதி ஏற்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளம் பதிவிட்டுள்ளார்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

"2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது முதலே, ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி இந்தியாவின் மதச்சார்பின்மைத் தன்மையைச் சீர்குலைத்து, சகிப்பின்மையை வளர்த்து, நமது இசுலாமிய சமூகத்தவருக்கு எதிரான பாகுபாட்டை ஊக்குவித்து வருகிறது. குடியுரிமைத் திருத்தச் சட்டம் போன்ற இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் வழியாக இசுலாமியர் மீதான வெறுப்பைச் சட்டப்பூர்வமாக்க வழிவகுக்கிறது.

இசுலாமிய வெறுப்பை எதிர்த்துப் போராடுவதற்கான பன்னாட்டு நாளில், பா.ஜ.க. ஆட்சியின் வகுப்புவாத பாசிசத்தை வேரறுத்து, அவர்களின் பிடியில் இருந்து இந்தியாவின் பரந்துபட்ட பன்முக ஆன்மாவை மீட்க ஒன்றிணைய உறுதியேற்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## குடியுரிமை திருத்தச் சட்டம் –

# இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல - இந்துக்களுக்கே எதிரானது!

## "புதிய தலைமுறை" தொலைக்காட்சி 'நேர்பபட் பேசு' விவாத நிகழ்ச்சியில் ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி விமர்சனம்!

**'புதிய தலைமுறை' தொலைக்காட்சியில், 'அவசர கதியில் குடியுரிமை திருத்தச் சட்டம், சந்தேகம் கிளப்பும் ஸ்டாலின், சி.ஏ.ஏ. திடீர் அமலுக்கு காரணம் என்ன?' என்ற தலைப்பில் 'நேர்படப் பேசு' விவாத நிகழ்ச்சியில் ஊடகவியலாளர் இந்திர குமார் தேரடி யின் விவாதம் வருமாறு:**

இதில் எதிர்க்கட்சிகள் விமர்சிக்கிறது என்பதைத் தாண்டி, சமீபத்தில் பி.ஜே.பி. வெளியிட்டுள்ள விளம்பரங்களை எல்லாம் பாருங்கள், மோடி ஒரு படகில் இருப்பதைப் போலவும், கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற இந்துக்களை எல்லாம் 'வாருங்கள்' என்று கரை சேர்த்து கூட்டி வருவதைப்போன்று ஒரு சித்திரத்தை உருவாக்கி இருப்பதைக் காணலாம். அவர்கள் கொண்டு வரக் கூடிய தோற்றம் என்னவென்றால் , 'உலகில் இருக்கக் கூடிய எல்லா இந்துக்களுக்கும் நாங்கள் பாதுகாப்பு வழங்குகிறோம்.

இந்து மாக்கடலைச் சுற்றி இருக்கக் கூடிய அத்தனை நாடுகளிலிருந்தும் இந்துக்களாகிய இந்தியர்களை நாங்கள் உள்வாங்கப் போகிறோம்.' அப்படி என்கின்ற ஒரு தோரணையை உருவாக்குவதற்கு அவர்கள் விரும்புகிறார்கள்.

இது எல்லாமே அரசியலுக்காகவா என்றால் 'ஆமாம், எல்லாமே அரசியலுக்குத்தான்' என்று ஒத்துக் கொள்கிறது, அதுதான் இந்த நாட்டுக்கு மக்களுக்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகம்.

ஒரு நாட்டில் சட்டம் இயற்றப்படுகிறது என்றால், சில சட்டங்கள் அரசியல் காரணங்களுக்காக ஏற்றப்படும், சில சட்டங்கள் சமூகக் காரணங்களுக்காக ஏற்றப்படும், சில சட்டங்கள் பொருளாதாரக் காரணங்களுக்காக ஏற்றப்படும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணங்கள் இருக்கும். இப்போ இந்தச் சட்டத்திற்கு என்ன சொல்கிறார்கள்?

ஆமாம், இது அரசியலுக்காகத்தான். இந்தச் சட்டம் ஓட்டு வங்கியைத் தரும் என்று சொல்கிறார்கள். இது இந்தியர்களுக்குச் செய்கின்ற துரோகம். ஒரு சட்டத்தினால் ஓட்டு வரும், அந்தச் சட்டத்தைப் போடுகிறேன் என்று சொல்வது இந்தியாவினுடைய, அரசியலமைப்பு சட்டம் வகுத்துக் கொடுத்து இருக்கின்ற அடிப்படை விழுமியங்களுக்கு எதிரானது. எவ்வளவு மோசமான ஒரு நிலைக்கு நாம் போய்க் கொண்டு இருக்கின்றோம். மனிதன் மனதில் இருக்கக் கூடிய அழுக்குகளையும், வக்கிரங்களையும், தோண்டிவிட்டு, நோண்டி அந்த நாற்றத்தில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது பி.ஜே.பி.

இது இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல; இது இந்துக்களுக்கே எதிரானது. இங்கே இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய மக்களாகிய அனைவருக்கும் மனதிலே ஒரு பதற்றம் இருக்கு. குடியுரிமை பற்றி தீர்மானம் செய்றாங்களாமே, என்னமோ நடக்குது என்று சொல்லி டீக்கடை வரைக்கும் மனசில் பயம் பரவிக் கிடக்கிறது.

இஸ்லாமியர்கள் அவ்வளவு பேரும் பயத்தோடு வாழ்கிறார்கள். ஜாமியா மில்லியா பல்கலைக் கழகத்தில் எந்த எதிர்க்கட்சிகள் போராட்டத்தை ஒருங்கிணைத்தது. டெல்லி பல்கலைக்கழகத்தில் எந்த எதிர்க்கட்சி போராட்டத்தை ஒருங்கிணைத்தது. இந்தியாமுழுவதும்நடைபெற்றசிறுபான்மையினர் போராட்டத்தை எந்த எதிர்க்கட்சி ஒருங்கிணைத்தது. எதிர்க்கட்சிகள் அந்த ஒருங்கிணைப்பைச் செய்யாமல் இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டோடுதான் மக்கள் இயக்கங்கள் அந்தப் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

**இந்திரகுமார் தேரடி**
ஊடகவியலாளர்



எதிர்க்கட்சிகள் இன்றைக்கு போராட்டத்திற்குப் போகாமல் அறிக்கைகளோடு நின்று விட்டார்கள் என்ற காரணத்தால்தான் மக்கள் தன்னெழுச்சியாக அந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அதில் இருப்பவர்கள் எல்லோரும் சாமானியர்கள். அந்த சாமானியர்களுடைய போராட்டம், இப்போது இங்கே வண்ணாரப்பேட்டையில் அந்தப் போராட்டம் நடைபெற்றது. இந்த சி.ஏ.ஏ. சட்டம் கொண்டு வந்த அன்று இரவே போராட்டம் வெடித்தது. அந்தப்போராட்டத்தில் அப்போது இருந்த அரசு கொடூரமான தாக்குதலை நடத்தியது. எந்த எதிர்க்கட்சி இந்தப் போராட்டத்தை ஒருங்கிணைத்தது. மக்கள் தாமாகப் பயந்து போய் அலறி அடித்துக் கொண்டு போய் ஓடி வந்தார்கள். அப்படி ஓடி வந்தவர்களை நோக்கி மோடி அரசு என்ன சொல்கிறது, "உங்களுக்கெல்லாம் எந்த பாதிப்பும் இல்லை, பயப்படாமல் இருங்கள்" என்று சொல்கிறார்கள்.

'உண்மையிலேயே பாதிப்பு இல்லை' என்பவர்கள், செயல்பாடுகள் மூலம் நிரூபிக்க வேண்டும். நேற்றைக்கு டெல்லியில் போலீஸ்காரர்கள், யார் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். ஒன்றிய உள்துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது.

ஒன்றிய உள்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய போலீசார், மசூதிக்குள் கூட்டமாக இருக்கிறது என்று அதற்கு வெளியே நின்று தொழுது கொண்டிருந்த இஸ்லாமியர்களை எட்டி மிதிக்கிறார்கள். கோவிலுக்கு வெளியே நின்று எத்தனையோ பேர் நின்று சாமி கும்பிட்டுக் கொண்டு இருக்கின்றார்களே அவர்களை அந்தப் போலீசார் எட்டி உதைக்க முடியுமா? இல்லை, அப்படி உதைத்தால் சரியா? ஆனால் இஸ்லாமியர்கள் ரோட்டில் நின்று தொழுகை செய்கிறார்கள் என்று அவர்களை எட்டி உதைக்கிறார்களே இது எந்த விதத்தில் சரியானது?

அப்படி இருக்கும் போது, இந்த நாட்டில் இஸ்லாமியர்கள் எப்படி பாதுகாப்போடு வாழ முடியும், எதிர்க்கட்சிகள் எப்படி அமைதியாக இருக்க முடியும்? இப்போது நடந்து கொண்டிருக்கின்ற பாலிடிக்ஸ்க்கு பிரதமர் மோடி வைத்திருக்கக் கூடிய பெயர் அப்பீஸ்மெண்ட் பாலிடிக்ஸ். (appeasement politics) அப்பீஸ் மெண்ட் என்றால் என்ன? state of being satisfied.

எல்லாவற்றையும் பெற்று விட்டோம் என்ற உணர்வில்லாமல் குறைந்த பட்சம் நிம்மதியாக இருக்கின்றோம் என்ற அந்த உணர்வைப் பெற வேண்டும் என்பது தான் அப்பீஸ் மெண்ட் என்பது. அது ஜனநாயகத்தினுடைய அடிப்படை.

பெரும்பான்மை இந்துக்களை அவர் அப்பீஸ் செய்ய வில்லை, பெரும்பான்மை இந்துக்களை அவர் அரகண்டா மாற்றுகிறார். இதனை வைலண்டா மாற்றுகிறார். அது தான் இன்றைக்கு மணிப்பூரில் நடைபெற்று வருகின்ற கலவரம். அது தான் குஜராத்தில் நடைபெற்ற கலவரம். அது தான் இன்றைக்கு இந்தியா முழுவதும் என்ன பிரச்சினை போய்கிட்டு இருக்கு. இந்தியாவில் என்றைக்கும் இல்லாத வகையில் வேலை வாய்ப்பின்மை பெருகிப்போய் இருக்கிறது.

2008 இல் 5.1 சதவிகிதமாக இருந்த வேலை வாய்ப்பு இல்லாதவர்களின் எண்ணிக்கை இன்றைக்கு 7.6 ஆக வந்து நிற்கிறது. இந்த வேலை வாய்ப்பின்மை அதிகரித்ததற்கு யார் காரணம்? யார் எடுத்த பொருளாதார நடவடிக்கைகள் காரணம்? மக்கள் எல்லாவற்றையும் தெளிவாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வேலை இல்லாமல் நாம் சாலையில் நிற்பதற்கு காரணம் யார்? கேஸ் சிலிண்டர் வாங்க முடியாமல் மறுபடியும் விறகு அடுப்பிற்கு தள்ளியது யார்? கேஸ் அடுப்பு வாங்க முடியாமல் எல்லா வற்றுக்கும் ஜி.எஸ்.டி. வரி போட்டு நிறைச்சது யாரு, போடும் வரியையெல்லாம் சரியாக வாங்குகிறேன் என்று பீற்றிக் கொள்ளும் இந்த அரசு கார்ப்பரேட்களுக்கு வரிச்சலுகை செய்து கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் மக்கள் தெளிவாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் தான் மக்கள் வாக்களிக்கப் போகிறார்கள். இப்போது இவர்களுக்கு அந்தப் பயம் வந்து விட்டது.

சில மாநிலங்களில் சி.ஏ.ஏ. சட்டத்தின் மூலம் வாக்கு பெற முடியும் என்பது, 'மதத்தின் அடிப்படையில் மக்கள் முட்டாளாக இருக்கிறார்கள்' என்பதை இது ஒத்துக்கொள்வதற்குச் சமம். மதத்தின் அடிப்படையில் மக்கள் முட்டாளாக இல்லை.


இந்த சி.ஏ.ஏ. சட்டத்தின் மூலம் வெளிநாட்டில் இருந்து இந்துக்களை அழைத்து வரப்போவதாக சொல்கிறார்கள், ஆனால் உள் நாட்டில் உள்ள இந்துக்களின் நிலை என்ன.? வாழ்வதற்கு வீடு இல்லாமல் இருக்கிறார்கள். சாப்பிடுவதற்கு உணவுக்கு காசு கொடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மதத்தின் அடிப்படையில் ஒட்டுப்போட்டு விடுவார்கள் என்றால் மக்களை முட்டாள்களாகக் கருதுவதின் வெளிப்பாடு அது. மக்கள் முட்டாள் அல்ல, அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள்.

மக்களாகிய நாம் இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தின்படிதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 'எல்லோரும் சமம்' என்று யார் சொன்னார்கள்? ஏன் தாத்தா, பாட்டி சொல்லவில்லை.' இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் 'நாம் எல்லோரும் சமம்' என்று சொன்னது.

"சாதியின் அடிப்படையில் பிரிவது இல்லை, மதத்தின் அடிப்படையில் பிரியத் தேவையில்லை, எல்லோரும் இந்தியாவின் குடிமகனாக எல்லோரும் ஒன்றாக வாழலாம்" என்று சொல்கிறது.

ஆனால் அப்படி எல்லோரும் ஒன்றாக வாழும் போது தமிழ்நாட்டின் கன்வென்ஷன் நடக்கிறது என்று சொல்லிவிட்டு, எங்கேயோ நடப்பதற்கு இங்கே நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். உள் நாட்டிலே இவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உள் நாட்டிலே இவர்கள் பீப் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி அடித்து விரட்டுகிறார்கள். அவர்கள் கையில் வைத்து இருப்பது மட்டன், பீப்பே இல்லை, போலியாக அவர்களை அடித்துக் விரட்டினார்கள் பி.ஜே.பி.காரர்கள்.

இவ்வாறு ஊடகவியலாளர் இந்திர குமார் தேரடி விவாதத்தில் பேசினார்.



சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.வர்தக அணி சார்பில் கழகத் தலைவர், முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு தலைமையில்,காக்கும் கரங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு அறுசுவை உணவினை மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ,வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் வழங்கினார்கள். உடன் மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி,பொது குழு உறுப்பினர் செல்வி சௌந்தராஜன்,எஸ்.சரவணன்,த.சீனிவாசன்,க.மதியழகன்,வே.கனிமொழி,லயன் சி.எஸ்.நந்தகுமார்,ஆர்.கோவிந்தராஜன்,ஏ.பாஸ்கர்,ஜெ.சக்திவேல், சுசீலா துரைராஜ், உ.கலைச்செல்வி, கிரிஜா பாஸ்கர்,சாந்தி,எல்.ராணி,ஜெ.அசோக்குமார், தென்றல் விஜி,ஆர்.எஸ்.மனோகர்,பி.கோவிந்த், த.ஜெகதீஷ், கே.தங்கம், கிரிராஜன், தங்கராஜ் பிரபா,என்.விச்சு, மதுரை ராகுல் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

இன்று பிற்பகலில் அறிவிப்பு!


# நாடாளுமன்றத் தேர்தல் தேதி!

## தலைமைத் தேர்தல் ஆணையம் தகவல்!

புதுடெல்லி, மார்ச் 16–

நாடாளுமன்ற தேர்தல் தேதி இன்று பிற்பகல் 3 மணிக்கு அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற மக்களவையின் பதவிக் காலம் வரும் மே மாதத்துடன் நிறைவடைகிறது. இதைத் தொடர்ந்து ஏப்ரல், மே மாதங்களில் மக்களவைத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டு பணிகளை துரிதப்படுத்தி உள்ளது. நாடாளுமன்ற தேர்தலுடன் ஆந்திரா, ஒடிசா, அருணாசல பிரதேசம், சிக்கிம் ஆகிய 4 மாநிலங்களுக்கான சட்டப்பேரவை தேர்தலும் நடைபெற உள்ளது. இதேபோல் ஜம்மு காஷ்மீர் மாநில தேர்தல் தேதியும் அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் தேதி தொடர்பாக அனைத்து மாநில தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனையை நிறைவு செய்துள்ள தேர்தல் ஆணையம், இன்று இறுதிக்கட்ட ஆலோசனை மேற்கொண்டது. தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையர்கள் ஞானேஷ் குமார் மற்றும் சுக்பீர் சிங் சாந்து ஆகியோரும் பங்கேற்றனர். சுமார் ஒருமணி நேரத்திற்கு மேல் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் தேர்தல் தேதி முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து இன்று (16.3.2024) பிற்பகல் 3 மணிக்கு தேர்தல் தேதி அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பூண்டி வடக்கு ஒன்றிய கழக அலுவலகம் திறப்பு விழா ஒன்றிய செயலாளர் எம்.ஜான்(எ)பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு புதிய அலுவலகத்தை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழாவை கொண்டாடினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் பி.ஜெ.மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், ஆ.சக்தியவேலு, டி.கிறிஸ்டி, அபிராமி குமரவேல், மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி, கே.வி.லோகேஷ், டி.மோதிலால், டி.சங்கர், டாக்டர் வில்சன், ரவிக்குமார், எம்.ஆறுமுகம், வழக்கறிஞர் சீனிவாசன், நிர்வாகிகள் ராகவன், இளைஞரணி நவீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்கள்

# தமிழ்ச் சினிமாவின் திராவிடச் சூரியன்



நாள் : 16.3.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணி
இடம் : கோவை சுகுணா ஆடிட்டோரியம், காளப்பட்டி ரோடு

**கலைஞரின் நூற்றாண்டு விழாவை** முன்னிட்டு
**தி.மு.க. மாநில வர்த்தகர் அணி** சார்பில்
கழக வர்த்தகர் அணிச் செயலாளர்
கவிஞர் **காசிமுத்து மாணிக்கம்** தலைமையில்

# கலை இரவு



வரவேற்புரை
நாமக்கல் **கே.எஸ்.மூர்த்தி**

கோவை மண்டல விழாக்குழு
திண்டுக்கல் **வி.ஜெயன், வே.பல்லவிராஜா, ஐ.கென்னடி, பி.தர்மசெல்வன்**

முன்னிலை
மாண்புமிகு **மு.பெ.சாமிநாதன்**
மாண்புமிகு **என்.கயல்விழிசெல்வராஜ்,**
மாண்புமிகு **கோ.வி.செழியன்,** மாண்புமிகு **கா.இராமச்சந்திரன்**

சிறப்புரை
மாண்புமிகு **சு.முத்துசாமி**
மானமிகு **ஆ.ராசா** எம்.பி.

புகழுரைப்போர் – திரைப்பட இயக்குனர்
## நடிகர் கே.பாக்கியராஜ்
அவர்கள்

மாவட்ட செயலாளர்கள்
**நா.கார்த்திக்,** தொண்டாமுத்தூர் **அ.ரவி, தளபதி முருகேசன், க.செல்வராஜ்** எம்.எல்.ஏ. **இல.பத்மநாபன், டி.எம்.செல்வகணபதி, இரா.ராஜேந்திரன்** எம்.எல்.ஏ. **எஸ்.ஆர்.சிவலிங்கம், பா.மு.முபாரக், அ.நல்லசிவம்,** தடங்கம் **பி.சுப்ரமணி, பி.பழனியப்பன்**

மாநில, மாவட்ட வர்த்தகர் அணி நிர்வாகிகள்
எஸ்.முத்துச்செல்வி, மாலை ராஜா என்.தாமரைபாரதி, வேப்பூர் வி.எஸ்.பெரியசாமி, எஸ்.ஆர்.உமரிசங்கர், கே.ஜி.பாஸ்கர், பி.டி.பாண்டிசெல்வம், டி.ஆர்.முத்துசாமி, வி.பி.மணி, வி.எஸ்.ராமகிருஷ்ணன், க.தனசெல்வம், த.வனராஜ், பெ.சுந்தரவதனம், ஆ.சத்தியமூர்த்தி

கோவை மண்டல வர்த்தகர் அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள்
பி.மாரிசெல்வன், ஏ.கே.வேலுசாமி, கே.கே.கண்ணன், மணி (எ) எஸ்.எஸ்.சிவசுப்பிரமணி, சி.தங்கராஜ், ஏ.ரஹமத்துல்லா, தாமோதிரன், பெ.க.துரைசாமி, பாண்டித்துரை, ச.மணிவேல், ம.ரவி, மனோகர், கே.எம்.ராஜேந்திரன், கே.பி.எஸ்.மகாலிங்கம்

மாலை 4 மணிக்கு **திண்டுக்கல் சக்தி** குழுவினரின்
**சிலம்பாட்டம், தப்பாட்டம், பறையாட்டம், மயிலாட்டம்**

மாலை 6 மணிக்கு
பேராசிரியர் **கி.பாரதிராஜா,** வழக்கறிஞர் **சினேகா** குழுவினரின்
**பூம்புகார் (சிலப்பதிகாரம்) நாடகம்**
**தலைவர் கலைஞர் கை வண்ணத்தில் உதித்த தீந்தமிழ்**
**திரையில் இருந்து மேடைக்கு ஒரு பயணம்**

விழாக்குழு ஒருங்கிணைப்பாளர் : **கோவை ஆர்.சந்தீப்ராஜீ** – நன்றியுரை : **நா.முருகேசன்**

இரவு 8.00 மணி **இரவு விருந்து**

இப்படிக்கு
## கவிஞர் காசிமுத்து மாணிக்கம்
கழக வர்த்தகர் அணிச் செயலாளர்




அனுமதி இலவசம், அனைவரும் வருக. வருக..

# உடன்பிறப்பே... 49

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாக பயணித்து, கழகம் வளர்த்த செ.குப்புசாமி அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்..



## செ.குப்புசாமி: “வெற்றி தேடிக் கொடுத்த உறுதுணை!”

திராவிட முன்னேற்றக் கழகம் தாய்க் கழகம் எனில், அந்தக் கழகம் பாராட்டி, சீராட்டி வளர்க்கும் குழந்தைகளாக பல துணை அமைப்புகள் உள்ளன. அதில் உழைக்கும் தொழிலாளர்களை ஒன்று சேர்க்கும் அமைப்பாக உள்ளது தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை (தொ.மு.ச.பே). கடந்த ஆண்டு, அந்தச் சங்கத்தின் பொன்விழா நிகழ்ச்சி. அதில் கலந்துகொண்ட கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், “ஆற்றல்மிக்க அறிவியக்கப் போராளிகளை உருவாக்கும் அமைப்பாகத் தொடர்ந்து செயல்பட வேண்டும்” என வாழ்த்துரை வழங்கியபோது, ‘ஒன்றிய அரசின் அங்கீகாரம் பெற்ற சங்கம்’ எனக் குறிப்பிட்டு வாழ்த்தினார்.

ஆனால், சங்கம் தொடங்கப்பட்ட 1970 களில், அந்தச் சங்கத்தை வளர்ப்பதற்கு முத்தமிழறிஞர் கலைஞரும் கழகமும் பட்டபாடுகள் கொஞ்சம் நஞ்சமல்ல. தொழிலாளர்கள் மத்தியில் கொள்கை உரத்துடன் செயலாற்ற, திராவிடப் பற்றுடன் தொழிலாளர்களை வளர்த்தெடுக்க கலைஞர் நம்பிக்கையுடன் பற்றி அழைத்த கரம், தொ.மு.ச பேரவையின் உரம், செ.குப்புசாமி.

“ஒரு இயக்கத்துக்குச் சிந்தனையாளர்கள் தேவை. பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கூடியவர்கள் தேவை. முக்கியமாக பிரச்சினைகளை உருவாக்காதவர்கள் தேவை. அந்தப் பட்டியலிலே தன்னை இணைத்துக் கொண்டிருப்பவர் குப்புசாமி அவர்கள்” என முத்தமிழறிஞர் பாராட்டிய அன்பு உடன்பிறப்பு அவர்.

### பல்கலையில் அரசியல் பாடம்

திருவண்ணாமலை மாவட்டம், கடம்மை என்கிற ஊரில், செங்கல்வராயன் - ஜானகி அம்மையார் ஆகியோரின் மகனாக 1926 -ஆம் ஆண்டில் பிறந்தவர். பள்ளிக் கல்விக்குப் பின்னர், 1946-ஆம் ஆண்டில் உயர்கல்விக்காக அண்ணாமலை பல்கலைக்கழகம் சென்றவருக்கு, புதிதாக ஓர் உலகத்தை அறிமுகம் செய்தார்கள் அவருடன் பயின்றவர்கள். ஆம், கே.ஏ.மதியழகன், இராம.அரங்கண்ணல், வி.வி.சாமிநாதன், முல்லை சக்தி, தில்லை வில்லாளன், இரெ.இளம்வழுதி என திராவிட இயக்கத் தீரர்கள் பட்டாளமே அங்கு மையம் கொண்டிருந்தது. ஏற்கெனவே ‘அறிந்திருந்த’ அளவில் இருந்த திராவிடப் பார்வை, அதன் பின்னர் முழுநேர அரசியல் செயலாக குப்புசாமிக்கு மாறியது.

பல்கலைக்கழக நிகழ்ச்சிக்கு பேரறிஞர் அண்ணாவை அழைப்பதற்காக, வி.வி. சாமிநாதனுடன் காஞ்சிபுரம் வந்தார் குப்புசாமி. அவர்களை அண்ணா அணுகிய விதம், அவரது எளிமை ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டு அண்ணாவின் பற்றாளராக மாறினார் குப்புசாமி. அந்தப் பற்று தி.மு.கழகம் தொடங்கப்பட்டபோது, அதன் தொடக்க உறுப்பினராக இணைத்துக் கொள்ள வைத்தது.

### தொழிற்சங்கப் பிணைப்பு

1950-ஆம் ஆண்டில், தென்னக ரயில்வே துறையில் எழுத்தராகப் பணிக்குச் சேர்ந்தார். அங்கு சேர்ந்ததும் எஸ்.ஆர்.எம்.யு தொழிற்சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து, அந்தச் சங்கத்தின் துணைத் தலைவராகத் தொழிற்சங்க வாழ்க்கையைத் தொடங்கினார். ரயில்வே தொழிலாளர் நலனுக்கான பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை உள்ளிட்ட பல இன்னல்களைச் சந்தித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞரை முதன்முதலில் 1955-ஆம் ஆண்டு சந்தித்தார். தன் நண்பர் ராமச்சந்திரன் என்பவரின் திருமணத்துக்கு வாழ்த்துரை வழங்க வேண்டும் என்றும், தனது மகளுக்குப் பெயர் சூட்டிட வேண்டுமென்றும் அந்த நிகழ்ச்சிகளுக்கு அழைப்பதற்காக, கலைஞரைச் சந்திக்க வந்தது முதல் கலைஞரின் அணுக்கமான நண்பரானார்.

> **அகில இந்திய அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தங்களில் பங்கேற்று தொழிற்சங்க நடவடிக்கைகளில் முக்கியப் பொறுப்பாளராக அடையாளம் காணப்பட்டார்.**

1968-ஆம் ஆண்டு மற்றும் 1969-ஆம் ஆண்டுகளில் ரயில்வே தொழிலாளர் மற்றும் அகில இந்திய அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தங்களில் பங்கேற்று தொழிற்சங்க நடவடிக்கைகளில் முக்கியப் பொறுப்பாளராக அடையாளம் காணப்பட்டார். 1970-ஆம் ஆண்டில் கழகத்தின் பல்வேறு தொழிற்சங்க அமைப்புகளையும் ஒன்று திரட்டி, தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையாக உருவாக்கினார் கலைஞர். அதற்காக கலைஞர் அமைத்த குழுவில் முக்கிய அங்கம் வகித்தவர் குப்புசாமி.

### முழுநேர அரசியல்வாதி

தொ.மு.ச. பேரவை அமைந்த பின்னர், அதனை வளர்ப்பதற்காக இரயில்வே பணியில் இருந்து விலகி, முழுநேர தொழிற்சங்கவாதியாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதுடன், கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் முன்னணியில் நிற்பவராக இருந்தார்.

கலைஞரின் விசுவாசிகள் அனைவருக்கும் கிடைத்த மிசா சிறைவாசத்தை குப்புசாமியும் அனுபவித்தார். அந்த நம்பிக்கைக்குக் கிடைத்த பொறுப்பாக தொ.மு.ச பேரவைத் தலைவராக 1977-ஆம் ஆண்டில் குப்புசாமியை நியமித்தார் கலைஞர். அதன் பின்னர் கிட்டத்தட்ட 36 ஆண்டுகளாக தொ.மு.ச பேரவைத் தலைவராக இருந்தார். அந்த வகையில், தொழிற்சங்கவாதியாக 60 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் கொண்டவர். அதிலும் திராவிட இயக்கத்தின் தூணாக நின்றவர். தொ.மு.ச பேரவைக்கு இந்திய அளவில் அங்கீகாரம் கிடைக்க அவர் உழைப்புதான் துணை நின்றது.

### இயக்கத்துக்குப் பயன்

“தொழிலாளர் பிரச்சினைக்கும் தி.மு.க.வுக்கும் உள்ள தொடர்புகளை சட்டப் பேரவையில் விளக்கிப் பேச வேண்டுமெனில், அதற்கான புள்ளிவிவரங்களை குப்புசாமியிடம் கேட்டுக் கொள்வேன். அந்த அளவுக்கு தொழிலாளர்களைப் பற்றி ஆழ்ந்த அறிவு கொண்டவர் அவர்” என குப்புசாமி குறித்துப் புகழ்ந்துள்ளார் கலைஞர்.

இயக்கத்தால் தனக்குப் பயன் வேண்டுமென்று கருதாமல், இந்த இயக்கம் பயன்பெற வேண்டுமென்று உழைத்த குப்புசாமியை 1998-ஆம் ஆண்டில் வடசென்னை தொகுதியில் வெற்றிபெற வைத்து நாடாளுமன்றம் அனுப்பி வைத்தார் முத்தமிழறிஞர்.

தொழிலாளர்களும் மீனவர்களும் அதிகம் வசிக்கும் இந்தத் தொகுதியில் கழகமே அதிக முறை வெற்றிக்கொடி நாட்டியுள்ளது. தொ.மு.ச. பேரவைத் தலைவருக்கு அந்தத் தொகுதியை ஒதுக்கியது கலைஞரின் விருப்பம் மட்டுமல்ல, மக்களின் விருப்பமாகவும் இருந்தது. அந்த விருப்பம்தான் 1999 மற்றும் 2004-ஆம் ஆண்டுகளில் குப்புசாமி வெற்றிபெறக் காரணமாகவும் அமைந்தது. தொடர்ந்து மூன்று முறை அதே தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, கழகத்தின் குரலை டெல்லியில் ஒலித்தவர். 2004-ஆம் ஆண்டில் நாடாளுமன்ற மதிப்பீட்டுக் குழுத் தலைவராக ஐந்து ஆண்டுகள் சிறப்பாகச் செயல்பட்டார்.

### ஒரே ஒரு நம்பிக்கை

கழகத்தின் தலைமை நிலையச் செயலாளராக 15 ஆண்டுகள், தொ.மு.ச. பேரவை இதழான **‘உழைப்பாளி’**யின் வெளியீட்டாளர் எனப் பல பொறுப்புகளை வகித்தவர் குப்புசாமி. 2010-ஆம் ஆண்டில் முப்பெரும் விழா விருதுகளில் அண்ணா விருதினை அவருக்கு அளித்து கலைஞர் மகிழ்ச்சி அடைந்தார்.


2013-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் தனது 87-வது வயதில், வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார் குப்புசாமி. கழகம் அவரது உழைப்புக்கு மரியாதை செய்யும் வகையில் மூன்று நாட்கள் துக்கம் அனுசரித்தது. அடுத்த சில நாட்களில் அறிவாலயத்தில் குப்புசாமி அவர்களின் படத் திறப்பு நிகழ்ச்சி. தனது உடன்பிறப்புக்களில் ஒருவரை இழந்த துயரம், கலைஞரின் குரலில், சொற்களில் வெளிப்பட்டது.

“90 வயதை நெருங்கும் இந்தக் காலகட்டத்தில் எவ்வளவோ நண்பர்களைப் பெற்றிருந்தேன். எவ்வளவோ நண்பர்களை இழந்திருக்கிறேன். எனினும், எனக்கு இருக்கும் ஒரே ஒரு நம்பிக்கை, எத்தனை பேர் மறைந்தாலும், அவர்கள் உருவாக்கி வைத்துவிட்டுப் போயிருக்கும் தி.மு.க. என்ற இந்த உருவத்தை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. திராவிட இயக்கம் தோன்றிய காலத்தில் இருந்து நடைபெற்ற போராட்டங்களில் எல்லாம் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் பணியாற்றி வெற்றி கண்டுள்ளோம். அப்படி வெற்றி தேடிக் கொடுப்பதற்கு தி.மு.க.வுக்கு உறுதுணையாக இருந்தவர்களில் முக்கியமானவர்தான் மறைந்த குப்புசாமி” என தழுதழுத்தார்.

அந்த வெற்றிக் கொடியை அடுத்தடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதே கலைஞருக்கும், கலைஞரின் உடன்பிறப்பான குப்புசாமி அவர்களுக்கும் கழகத்தினர் செய்யும் கைமாறு!

...துடிக்கும்

### எங்கே ‘அரசியல் அறிவியல்’ பட்டம்?



‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ நூல் மூலம் அறிவுலகில் புது வெளிச்சம் பாய்ச்சியவர் கால்டுவெல். சமஸ்கிருதத்தின் துணையின்றி தனித்தியங்கும் ஆற்றல் கொண்டது தமிழ்மொழி என்னும் கால்டுவெலின் கருத்தும், ‘திராவிட மொழிக்குடும்பம்’ என்னும் கருத்தாக்கமும் ஆரிய சனாதனிகளை அலற வைப்பவை.

பாரதிய ஜனதா கட்சியின் வட்டச் செயலாளர் போலவே இந்துத்துவக் கருத்துகளைத் தொடர்ந்து முன்வைக்கும் ஆளுநர் ரவி, கால்டுவெல், ஜி.யு.போப், சார்லஸ் டார்வின், கார்ல் மார்க்ஸ் போன்ற சிந்தனையாளர்களை இழிவுபடுத்தி வந்தார். ‘பள்ளிப்படிப்பையே முடிக்காதவர் கால்டுவெல்’ என்பது அவரது சமீபத்திய அவதூறு. ஜி.யு.போப், கால்டுவெல் குறித்து தொடர்ந்து அவதூறுகளை முன்வைக்கும் ஆளுநரைக் கண்டித்து கிறிஸ்துவ அமைப்புகள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

அப்போது ‘கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றதோடு, இங்கிலாந்து மகாராணியிடம் இருந்து டாக்டர் பட்டம் பெற்றவர் கால்டுவெல்’ என்று ஆர்ப்பாட்டத்தில் தெரிவிக்கப்பட்டதுடன், கொடைக்கானல் பங்களாவில் பாதுகாக்கப்பட்ட கால்டுவெலின் பட்டச்சான்றிதழையும் காட்டி, ஆளுநரின் அவதூறை முறியடித்தார்கள்.

கால்டுவெலின் பட்டச்சான்றிதழை அவர்கள் காட்டிவிட்டார்கள். ‘அரசியல் அறிவியல்’ துறையில் பட்டம் பெற்றதாகச் சொல்லும் மோடியின் ரகசியச் சான்றிதழை ஆளுநர் எப்போது காட்டுவார்?

### ஃப்ளாஷ்பேக்





அ.சலாவூதீன்

**முதல் வேட்பு மனு!**

1957-ஆம் ஆண்டு தி.மு.கழகம் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தது. அந்தத் தேர்தலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குளித்தலை தொகுதியில் போட்டியிடத் தேர்வு செய்யப்பட்டார். அப்போது என் தாத்தா இமாம் சாஹிப் அவர்களோடு சென்று வேட்புமனு தாக்கல் செய்த பிறகு, இருவரும் இணைந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. அந்தத் தேர்தல் வெற்றிதான், கலைஞர் 13 முறை தொடர்ச்சியாக சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பு வகித்ததற்குத் தொடக்கமாக அமைந்தது..

**–குளித்தலை அ.சலாவூதீன்,**
**தலைமைக் கழகப் பேச்சாளர்,**
**கரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**கலைக் கண்காட்சி**

1962-ஆம் ஆண்டு டிசம்பர் 16 மற்றும் 17 தேதிகளில், கழகத்தின் தேர்தல் சிறப்பு மாநாடு கோயம்புத்தூரில் நடைபெற்றது. அதற்கு முன்னர் டிசம்பர் 10-ஆம் தேதி கலைக் கண்காட்சி நடத்தப்பட்டது. அதன் அமைப்பாளர்கள் டி.எம்.பார்த்தசாரதி, டி.கே.பொன்னுவேலு ஆகிய இருவரும் பொறுப்பேற்று அமைத்திருந்த அந்தக் கலைக் கண்காட்சியை, சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கண்டுகளித்தனர்.

### திராவிடத்தால் வாழ்கிறோம்

419

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131